
# மின்நிலா

ஆகஸ்ட் 24, 2020






கார்
சிறப்பிதழ்

engalblog.blogspot.com

**எங்கள் ப்ளாக் பதிவுகளின் வாராந்திர தொகுப்பும், மற்றும் சில சுவையான பகுதிகளும், படங்களும் ...**

**இந்த மின்நிலா புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்துகளையும், யோசனைகளையும் ...**

engalblog@gmail.com

**என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். நன்றி.**

**Cover photo by : KGG (from net)**

============

**பதிவுகளுக்கு இடையே உள்ள படங்கள் :**

**See the names in the photo.**

**ஆசிரியர்கள் :**

**B SRIRAM**

**K G GOUTHAMAN**

**KAYJEE**

**K G Y RAMAN**

**K S**

மின்நிலா 013 (முந்தைய இதழ் சுட்டி)

# பொருளடக்கம் பக்கம் எண்

கத்தரிக்காய் அடைத்த கறி ரமா ஸ்ரீநிவாசன்........................................2
எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள் ........................................5
சத்யா (சிறுகதை) கீதா ரெங்கன் ........................................7
கேள்வி - பதில்கள்........................................16
யார் நீ? ஸ்ரீராம்........................................22
பலசரக்கு :: ஸ்ரீராம்........................................26
**வி பா ஸ்ரீராம்** ........................................32
B + (Be Positive) செய்திகள் : ஸ்ரீராம்........................................36
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை ரமா ஸ்ரீநிவாசன் ........................................38
நாடி ஜோதிடம் வல்லிசிம்ஹன்........................................43
கார்களே நில்லுங்கள், கண்களே பாருங்கள் !! kayjee........................................46
உங்களுக்குத் தெரியுமா? கார் கால தகவல்கள் By KGG........................................67
வாசகர் அனுப்பிய கார் படங்கள்........................................68

**குறிப்பு :**

**நீல நிறத்தில் காணப்படும் தலைப்புகள் கொண்டவை இந்த மின்நிலா இதழில் மட்டும் வெளியிடப்படுபவை. மற்றவை அனைத்தும் சென்ற வார எங்கள் பிளாக் வலைப்பூவில் வெளியிடப்பட்டவை.**

# கத்தரிக்காய் அடைத்த கறி ரமா ஸ்ரீநிவாசன்

பழமுதிர் நிலையத்திற்கு காய்கறி வாங்கச் சென்ற என் கணவர் வளமான காய்களை கண்டவுடன் சொக்கிப் போய் எல்லாக் காய்களையும் அள்ளி போட்டுக் கொண்டு வந்து விட்டார். அதுவும் பள பளவென இருந்த கத்தரிக்காய்களை பார்த்தவுடன் இரண்டு கிலோ பிடித்துக் கொண்டு வந்து விட்டார். நாம்தான் தின்றே தீர்க்கும் கும்பல் ஆயிற்றே.

எனவே, ஒரு வாரத்திற்கு முன் ஒரு கிலோவை எடுத்து கத்தரிக்காய் அடைத்த கறி சமைத்தேன். என் கணவர் வாயிலிருந்து முத்து உதிராது. அவரே, சுவைத்து விட்டு "அட, கத்தரிக்காய் அடைத்த கறி என் பாட்டி சமைப்பது போலவே செய்திருக்கிறாய்" என்றார் பாருங்கள். உலகமே என் கண் முன் சுழன்றது. அதை இப்போது உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

<u>வேண்டிய பொருட்கள் :</u>

கத்தரிக்காய் : 1 கிலோ
கடலை பருப்பு : 2 டேபிள் ஸ்பூன்
தனியா : 2 டேபிள் ஸ்பூன்
காய்ந்த சிவப்பு மிளகாய் : 8
உப்பு : வேண்டிய அளவு
மஞ்சள் பொடி : ¼ டேபிள் ஸ்பூன்
பெருங்காயம் : 2 சிட்டிகை
நல்லெண்ணை : ஒரு கப்

செய்முறை :

வானலியை அடுப்பிலேற்றி அதில் ஒரு டேபிள் ஸ்பூன் நல்லெண்ணையை சேர்க்கவும். சூடாகிய பின்னர் முதலில் கடலை பருப்பை போடவும். ஒரு நிமிடம் அதை வறுத்த பின்னர், தனியாவை சேர்க்கவும். பின்னர் கடைசியாக மிளகாயை சேர்க்கவும். இது கலர் மாறாமலிருப்பதற்காக. நான் ஒரு சிட்டிகை பெருங்காயமும் சேர்ப்பேன். நன்றாக வறுபட்டு வாசம் வரும்போது கீழே இறக்கி வைக்கவும். நன்றாக சூடு ஆறிய பின்னர் இவை யாவையையும் மிக்ஸியில் சேர்த்து கொர கொரவென அரைக்கவும்.

இப்போது மறுபடியும் வாணலியை அடுப்பிலேற்றி இரண்டு டேபிள்

ஸ்பூன் எண்ணை சேர்த்து, சூடான பின் கடுகு, சிறிது உளுத்தம்பருப்பு சேர்த்து வறுக்கவும். கடுகு வெடித்து பருப்பு பொன் நிறமாய் மாறிய பின்னர், வெட்டி அலம்பி வைத்த கத்தரிக்காய்களை வாணலியில் போடவும். இங்கும் ஒரு சிட்டிகை பெருங்காயம் சேர்க்கவும். வேண்டுமானால் ஒரு கொத்து கருவேப்பிலை சேர்த்துக் கொள்ளலாம்.



சிறிது நீர் தெளித்தும் வதக்கலாம். எங்கள் வீட்டில் சிறிது சிறிதாக எண்ணை சேர்த்து வதக்குவோம். ¼ டேபிள் ஸ்பூன் மஞ்சள் பொடியை இப்போது சேர்த்து விடுங்கள். நன்றாக கரண்டியால் கிளறி வதக்கவும்.



காய் நன்றாக வதங்கிய பின், வேண்டிய அளவு உப்பும், அரைத்து வைத்த பொடியையும் சேர்த்து இரண்டு நிமிடங்கள் வதக்கிய பின்னர் இறக்கி வையுங்கள்.



வேறு பாத்திரத்திற்கு மாற்றுங்கள்.



இப்போது கத்தரிக்காய் அடைத்த கறி தயார். சிலர் கத்தரிக்காய்களை காம்பை மட்டும் வெட்டி விட்டு துண்டுகளாக வெட்டாமல் நான்கு பங்குகளாக பிளந்து அதற்குள் பொடியை அடைத்தும் சமைப்பார்கள். அவை யாவும் உங்கள் சௌகரியம்.

இந்த காய் செய்யும் நாளில் எங்கள் வீட்டில் ஒரு வற்றல் குழம்பும் வேண்டுமென்றால் பொரித்த அப்பளமும் இருக்கும்.

சமைத்துப் பாருங்கள். சாப்பிட்டுப் பாருங்கள். ரசித்துப் பாருங்கள்.

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள்




**LINK : INDIA :** https://www.amazon.in/dp/B08BYVY5C3
US : https://www.amazon.com/dp/B08BYVY5C3
UK : https://www.amazon.co.uk/dp/B08BYVY5C3




LINK : INDIA : https://www.amazon.in/dp/B08C2ZGBYJ
US : https://www.amazon.com/dp/B08C2ZGBYJ
UK : https://www.amazon.co.uk/dp/B08C2ZGBYJ




**LINK :**

**INDIA :** https://www.amazon.in/dp/B08CXBPPYN

**US** : https://www.amazon.com/dp/B08CXBPPYN

**UK** :https://www.amazon.co.uk/dp/B08CXBPPYN

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# சத்யா (சிறுகதை) கீதா ரெங்கன்

சத்யா! பெயருக்கு ஏற்றார் போல் சத்தியவதி என்றெல்லாம் சொல்லிட முடியாது என்றாலும் கருணை உள்ளவள்! யாருக்கு உதவி என்றாலும் ஓடி வருபவள்.

நான் என் வேலை காரணமாக அந்தச் சிறிய ஊரில் குடியேறிய போது என் அடுத்த வீட்டில்தான் இந்த சத்யா இருந்தாள். அந்தச் சிறிய ஊரில்தான் ஓர் அடித்தட்டு வர்கத்தின் வாழ்வு நிலையைக் கண்கூடாக நேரில் காணும் அனுபவமும் கிடைத்தது.

நான் நல்ல சம்பளத்துடனான வேலையில் இருப்பவன். ஊர் ஊராக, வெளிநாடுகள் வரை பயணம். கூடவே என் ஆத்ம திருப்திக்காக அவ்வப்போது கதைகள் கட்டுரைகள் என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதுவதுமுண்டு. என் பெற்றோரும் பாட்டியும் என்னுடன்தான். எனக்கு அலுவலக வேலைப்பளு அதிகம் என்பதால் அம்மாவிற்கு உதவியாக, பாட்டி கொஞ்சம் நடமாடும் நிலைதான் என்றாலும், பாட்டியைக் குளிப்பாட்டி, டயஃபர் போட்டு அவரது சிறு தேவைகளைக் கவனிக்க ஆள் தேவையாக இருந்தது.

இந்த சத்யாதான் அப்போது ஆபத்பாந்தவளாக வந்தாள். அவளை அப்பாயின்ட் செய்வதற்கு முன் அவளைப் பற்றித் தெரிந்து கொள்ள அவள் குடும்பம் பற்றி மட்டுமே கேட்டேன். ஆனால் வந்ததோ பெரிய ஃப்ளாஷ் பேக். எழுதும் ஆர்வத்தில் கொஞ்சம் கூர்ந்து கேட்டேன் என்றே சொல்லலாம்.

மிகவும் ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்தவள். இரண்டாம்தாரமாக ஒரு குடிகாரனுக்கு 20 வயது வித்தியாசத்தில், அவளது 23 வது வயதில் வாழ்க்கைப்பட்டவள். அந்த அளவிற்கு அவளது வறுமை. இப்போது வயது 35. முதல் மனைவியின் முதல் பையனுக்கு பார்வை கிடையாது. நரம்பு சம்பந்தப்பட்ட நோயும் இருந்தது. அதற்குப் பல தீர்வுகள் இருந்தாலும் அவர்கள் என்னவோ ஓர் அறைக்குள்ளேயே முடக்கி வைத்திருந்தார்கள்.

அடுத்து ஒரு பெண், ஒரு பையன் என்ற குடும்பத்துள் சத்யா நுழைந்தாள். அவள் குடிகாரக் கணவன் ஊர் முழுக்கக் கடன் வைத்திருந்தான். அவனுக்கு இருந்த ஒரே சொத்து அவன் இருந்த வீடு மட்டுமே ஆனால் அந்த வீட்டின் மேலும் கடன். சத்யா ஒரு ஃபோன் பூத் வைத்தாள். கூடவே ஒரு சிறிய உணவகம் வைத்தாள். உழைத்தாள். காசு சம்பாதித்தாள். கடனை எல்லாம் அடைக்கத் தொடங்கினாள்.

குடிகாரனுக்கு ராத்திரியானால் அவனது தேவையைப் பூர்த்தி செய்ய, சட்ட ரீதியான தாலி என்ற உரிமத்துடன் ஒரு பெண் இருக்க, விடுமா? இவளும் கருவுற்றாள். பெற்றாள். முதல் குழந்தை பெண் குழந்தை. அது வளரும் முன்

அடுத்ததாய் ஒரு கரு. கலைந்தது. அவள் உடலும் நலிந்தது. அதற்குள் முதல் மனைவியின் பெண்ணுக்குக் கல்யாணம். அவளும் குழந்தை பெற்றாள். மறுவருடமே வேறு ஒருவனுடன் ஓடியும் போனாள்.

இவள்தான் காரணம் என்று அந்தக் குடிகாரக் கணவன் சத்யாவை அடித்தான். இவள் ஒதுங்கினாளா? அடுத்து ஒரு ஆண் குழந்தை. அது வளரும் முன் அடுத்து ஒரு இயற்கை அபார்ஷன். சத்யாவின் உடல்நலன் நலிந்தது. கடை மூடப்பட்டது. குடிகாரன் ஒரு நாள் வேலைக்குச் சென்றால் பல நாள் வேலைக்குச் செல்ல மாட்டான். சத்யாவிற்கு மட்டுமா குழந்தைகள்? கடனும், வட்டியும் குட்டியுமாய் தன் குடும்பத்தைப் பெருக்கியது.

அந்தச் சமயத்தில்தான் நான் அந்தத் தெருவில் குடியேறியிருந்தேன். அவள் கொஞ்சம் அசடுதான் என்றாலும் கருணை உள்ளம் கொண்டவள். உழைக்க அஞ்சாதவள். எல்லோரிடமும் அண்ணே, அக்கா என்று யார் என்ன சொன்னாலும் கண்டு கொள்ளாமல் வேலை செய்பவள். நானும் அந்த அண்ணன்களுள் ஒருவனானேன். இவளின் கருணையைப் பார்த்து உதவிக்கு வைத்துக் கொள்ளலாம் என்று பேசிய போது நான் தெரிந்து கொண்டதுதான் மேலே சொன்ன ஃப்ளாஷ் பேக்.

சத்யாவிற்குப் புத்திசாலித்தனமான நல்ல சாமர்த்தியம் இல்லை. அசட்டு வகை சாமர்த்தியம்தான் இருந்தது. சம்பளமும் கூடவே இலவசமாக அறிவுரைகளும் வழங்கினேன். பாட்டியின் தேவைகள் குறைவுதான் என்பதால் சத் யாவை அருகில் இருக்கும் ஒரு கம்பெனிக்குப் பார்ட்டைமாக வேலைக்குப் போகச் சொன்னேன்.

நான் அவளை வேலைக்குச் சேர்த்துக் கொண்டதை அறிந்த தெரு மக்கள் என்னிடம் அக்குடும்பம் பற்றி சொல்லத் தொடங்கினார்கள். எனக்கு நேரமும் இல்லை. நாட்டமும் இல்லை இருந்தாலும் புதிதாகக் குடியேறியிருந்ததால் தெரு மக்களை புறக்கணிக்கக் கூடாது என்று அம்மாவைக் கை காட்டினேன். அம்மா என்னை முறைத்தாள் என்பது வேறு விஷயம்.

தெருவில் அவள் குடிகாரக் கணவனின் முதல் மனைவி பற்றி பல கதைகள் இருப்பதாக அம்மா சொன்னாள். மூத்தாளை அவள் கணவன் பைத்தியம் என்று அடைத்துப் போட்டிருந்தான் என்று ஒரு கதை. இவன் குடித்துக் குடித்தே குடியைக் கெடுத்தான் என்பதால் மனநிலை சரியில்லாமல் போக, அதனால் தற்கொலை செய்துகொண்டாள் என்று ஒரு சாராரும், அவன் கொலை செய்துவிட்டான் என்று மற்றொரு சாராரும் சொன்னார்களாம். போலீஸ் கேஸானது என்றும் சொல்லப்பட்டது.

எப்பவும் சிரித்துக் கொண்டே நகைச்சுவையுடன் கலகலப்பாக இருப்பவளின் சிரிப்பிற்குப் பின்தான் எத்தனை சோகம்? ஆனால், அவள் அதைப் பற்றி

எல்லாம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. வந்தது வரட்டும் பார்ப்போம் என்று ஒரு ஓட்டையிலிருந்து எடுத்து மற்றோரு ஓட்டை பெரிதாகும் போது அதை அடைப்பவள். அதைவிடப் பெரிது வரும் போது அதை இதிலிருந்து அடைப்பவள் என்றுதான் போகுமே ஒழிய எந்த ஓட்டையும் அடையாது. இந்த மாதிரியான மக்களின் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் தைரியமும் அசால்டாக இருப்பதும் படித்த நம்மைப் போன்றவர்கள் சிறு பிரச்சனைகளுக்குக் கூடத் தீர்வு காணப் பலவகையில் யோசிக்கிறோமோ என்றும் தோன்றியது.

ஒரு வேளை அவர்களுக்குப் பிரச்சனைகளே வாழ்க்கையாகிப் போனதால் எழுந்த மனநிலையாகக் கூட இருக்கலாம்.

முதல் மனைவியின் இரண்டாவது பையன், தான் காதலித்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு அப்பனுடன் இருக்க முடியாது என்று தனிக்குடித்தனம் போய்விட்டான். வீட்டில் சத்யா, குடிகாரக்கணவன், மூத்தாளின் நோய்வாய்ப்பட்ட பையன், சத்யாவுக்குப் பிறந்த இரு குழந்தைகள் என குடும்பம் இழுபறியில் ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு தினம் சத்யாவின் வீட்டிலிருந்த பாத்திரங்கள் எல்லாம் வெளியில் பறந்து வந்தன. தெருவில் உள்ளோர் என்னிடம் வந்து சொல்லவும், சென்றேன். “அண்ணே இங்க பாருண்ணே இந்த ஆளு செய்யறத. குடிக்கக் காசு கேக்குறான். நான் கொடுக்க மாட்டேனு சொன்னேன். மீனு சமைச்சுக் கொடுக்கணுமாம், கையில காசில்ல. வீட்டில உள்ளத சமைச்சுக் கொடுக்கறேன்னு சொன்னா கேக்க மாட்டேன்றான்... கோபத்துல இப்படிச் செய்யுறான் ண்ணே” எனக்குக் கோபம் வந்தது.

“சுந்தரம் என்ன இது கூத்து? உங்களுக்கு எத்தனை முறை சொன்னாலும் கொஞ்சம் கூட உரைக்கவே இல்லை?” சுந்தரம் பதிலே சொல்லாமல் இறங்கி வெளியில் உட்கார்ந்தான். குடிகாரனிடம் என்ன பேச முடியும்?

“அண்ணே, குடிச்சுட்டு வந்து நேத்து பிரியாணி வைச்சுக் கொடுன்னு ஒரே தொல்லண்ணே. வேலைக்கும் போக மாட்டேங்கிறான். இந்த மாச சம்பளத்துல கடன அடைக்கறதா? வீட்டுச் செலவுக்கு என்னா செய்யுறதுனு தெரியாம இருக்கேன். இந்தாளு குடிக்க காசு கேட்டு...ராத்திரியானா ஒரே தொல்லைண்ணே.... .அவன் பையன் வேற இந்த வீட்ட பிரிக்கச் சொல்லி சொத்து கேக்குறான். ஏற்கனவே இந்த வீடு மேல லோனு இருக்கு. அண்ணே எனக்கு இந்தச் சனியன விட்டு போயிட லாமானு தோணுது”

“நீ சொல்லுவியே தவிர அடுத்த நிமிஷம் கடன் வாங்கியாவது வக்கணையா சமைச்சுப் போடுவ. அவனும் திருந்தப் போறதில்லை. நீயும் திருந்தப் போறதில்ல அப்புறம் என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு”

திருந்தாத ஜென்மங்களுக்கு என்ன அறிவுரை கொடுத்து என்ன பயன்? பேசிப் பயனில்லை என்ற கோபத்தில் வீட்டிற்குச் சென்று விட்டேன். அம்மாவும் அப்பாவும் சத்யாவிற்கு எந்த வகையிலேனும் உருப்படியாக உதவ முடியுமா என்று யோசித்தனர். ஆனால் பயனில்லை என்பதுதான் நிதர்சனம்.

சம யோசிதமாக, புத்திசாலித்தனமாக வாழ்ந்தாலே, வாழ்க்கை சிக்கல்கள் நிறைந்தது எனும் போது, மனதில் தோன்றுபவற்றை எல்லாம், அதுவும் நியாயமற்ற உணர்வுகளைப் பற்றியும், எண்ணங்களைப் பற்றியும் சிந்திக்காமல் அசட்டுத்தனமாக முடிவெடுத்து செயல்படுத்தவும் செய்தால் வாழ்க்கை இன்னும் சிக்கல்கள் நிறைந்ததாகத்தானே மாறும்? அப்படித்தான் இந்தக் குடும்பத்தின் வாழ்க்கை முடிச்சுகள் நிறைந்த வாழ்க்கையாகிப் போனது.

அதுவும் ஒரு முடிச்சு அவிழத் தொடங்கினாலும் விடுபடாமல் கூடவே வேறொரு முடிச்சைத் தன்னுடன் கொண்டு வந்துவிடுவதாக இருந்தது. திடீரென்று ஒரு நாள் சத்யா, “அண்ணே நீ ஏண்ணே கல்யாணம் செஞ்சுக்கலை? ஒன்னை மாதிரி ஆளுங்களுக்கு படிச்ச பொண்ணுங்க வரிசை கட்டி நிக்குமே!”

“ஏனோ தோணலை.. செஞ்சுக்கலை.”

“பாட்டி சொல்லிச்சு ஒனக்கு ஒரு அக்கா, ஒரு தங்கச்சி இருக்காங்களாமே. அண்ணே, அம்மா, நா ஒண்ணு கேட்டா தப்பா நினைச்சுக்கிடாதீங்க. உங்க வீட்டுப் பொண்ணுங்கள்ல யாருக்காச்சும் என் புருஷன் மாதிரி ஒண்ணு இருந்தா என்னா செஞ்சுருப்பீங்க?”

இதற்கு டக்கென்று என்ன பதில் சொல்ல என்று தெரியாமல் நானும் அம்மாவும் பார்த்துக் கொண்டோம்.

“சமூகம், வாழ்க்கை முறை வேற வேற. என் அக்காவும், தங்கச்சியும் நல்ல வேலைல இருக்காங்க. நீ கேட்டாப்ல ஒரு வேளை அவங்களுக்கு உன் புருஷன் மாதிரி அமைஞ்சுருந்தா நாங்க வீட்டுல கலந்து பேசியிருப்போம். மாப்பிள்ளைய திருத்த முயற்சி எடுத்திருப்போம். சேர்ந்து இருக்க முடியுமா இல்லையான்னு கேட்டு முடியலைன்னு சொன்னா, நல்ல வேலைல இருக்கறதுனால தன்னைக் காப்பாத்திக்க முடியும்ன்றதுனால பிரிஞ்சுருப்பா.

வேலை இல்லைனாலும் நாங்க ஏதாவது வேலைக்கு ஏற்பாடு செஞ்சு ஆதரவும் கொடுத்திருப்போம். நாங்க எங்க மனுஷங்க, சமூகம் என்ன சொல்லுவாங்கன்னு கவலைப்படறதில்லை சத்யா.”

“எங்க இதிலயும் விட்டுப் போறதுங்க இருக்குதான். ஆனா என் சனங்க விடாது. கல்யாணத்துக்கு முன்ன, நான் திருப்பூர்ல ஒரு பனியன் கம்பெனில

வேலைக்குச் சேர்ந்திருந்தேன் எனக்கு எங்க வீட்டுலயும் எந்த சப்போர்ட்டும் இல்லை. இல்லேனா இப்படியொரு ஆளுக்குக் கெட்டி வைச்சுருப்பாங்களா? இல்ல இப்ப எங்க சனங்ககிட்ட என் கதையத்தான் ஏதாச்சும் பேச முடியுமா? இப்ப நீங்கல்லாம் உதவுறதுனால எனக்குப் புத்திமதி சொல்றதுனால ஓடுது" எனது சிந்தனைகளையோ, முடிவையோ சத்யாவின் மீது நான் திணிக்க நினைக்கவில்லை. அது போன்ற ஆலோசனைகளை வழங்கியதும் இல்லை. முடியவும் முடியாது என்பதே யதார்த்தம். அவளது வேலை எதுவும் நிரந்தரம் இல்லை. பொருளாதார ரீதியாகக் கூட எந்த ஒரு ஊன்றுகோலும் இல்லாத நிலையில் அவளுக்கு இது போன்ற முடிவுகள் சரியாகாது. அல்லது அவள் தன் காலில் நின்று, தன் ஜனங்களையும், ஊர் வாயையும் தைரியமாக எதிர்கொண்டு, வெளியே வந்தால்தான் உண்டு.

குடியும், கடனும் என்று 3 வருடங்கள் கடந்தன. அந்த நோய்வாய்ப்பட்ட பையனும் ஒரு நல்ல நாளில் கண்ணை மூடினான். அவன் இருப்பதை விட அதுவே மேல். மூத்தாள் பையன் ரூபாய் திரட்டி வீட்டின் மேலுள்ள கடனை அடைத்துவிட்டு வீட்டைப் பிரித்து ஒரு சின்ன போர்ஷனை சத்யாவிற்கும் அப்பனுக்கும் கொடுத்துவிட்டுத் தன் மனைவியுடன் பெரிய இடத்தில் குடி வந்துவிட்டான். அவனும், அவன் மனைவியும் கொஞ்சம் படித்தவர்கள். நான் பேசிய வரையில் நல்லவர்களாகத்தான் தெரிந்தார்கள்.

அப்பையனை நான் குறை சொல்ல மாட்டேன். சத்யாவிற்குக் குடித்தனம் நடத்தும் சாமர்த்தியம் போதாது. ஒரு குடும்பத்தில் யாரேனும் ஒருவருக்கேனும் மனப்பக்குவம் வேண்டும் யாருக்கும் இல்லை என்றால் என்ன செய்ய முடியும்? வின் வின் சிச்சுவேஷன் என்பது நிறுவனங்கள், வியாபாரத்தில் மட்டுமல்ல. குடும்பத்திற்கும் மிக அவசியமான ஒன்று என்பதை நான் எனது கம்பெனியில் கொடுக்கும் ட்ரெய்னிங்கிலும் சொல்லுவதுண்டு. இவர்களிடம் சொல்ல முடியுமோ?

அவளுக்கும், அந்தப் பையனுக்கும் பேச்சுவார்த்தை இல்லாமல் போனது. சத்யாவின் கணவன் தன் பையனுடன் அந்த போர்ஷனில் இருந்தான். சத்யா தனியாக அவளுக்கு என்று பிரித்துக் கொடுக்கப்பட்ட சைட் போர்ஷனில் தன் குழந்தைகளுடன் வாழத் தொடங்கினாள். கொஞ்சம் நன்றாகவே சென்றது.

மகன் வீட்டில் மருமகளுக்கு குடிகார மாமனார் ஒத்துவரவில்லை. தவறே இல்லை. கஷ்டப்பட்டு வைத்துக் கொண்டாள். குடிகாரன் நினைக்கும் சாப்பாடும், குடிக்கக் காசும் கிடைக்காமல் மீண்டும் சத்யா இருந்த போர்ஷனுக்குள் ஒட்டகம் புகுந்த கதையாக வந்துவிட்டான். சத்யாவும் முதலில் விடவில்லை. அவன் குழந்தைகளின் தலையின் மீது சத்தியம் செய்தான். சத்தியா மன்னித்து வீட்டிற்குள் வர அனுமதித்தாள். முதல் மன்னிப்பு

குடிகாரனின் சத்தியம் நிலைக்குமா? குடிக்கத் தொடங்கினான். செலவைச் சமாளிக்க, சத்யா தான் இருந்த பகுதியை பேச்சுலர் பையன்களுக்கு வாடகைக்கு விட்டு தன் குடும்பத்துடன் மொட்டை மாடியில் கூரை போட்டு வாழத் தொடங்கினாள்.

நான் நேரம் கிடைத்த சமயத்தில் அக்குழந்தைகளுக்குப் படிப்பும் சொல்லிக் கொடுத்து, படிப்பதற்குப் பண உதவியும் செய்துவந்தேன். குழந்தைகள் படிக்கக் கஷ்டப்பட்டார்கள். சூழல் சரியாக இருந்தால்தானே எல்லாம் சரியாக இருக்கும்? சத்யா தன் மகனை தனக்குத் தெரிந்த ஒரு ஆசிரியர் பார்த்துக் கொள்வதாகச் சொன்னதும் அவரிடம் விட்டுவிட்டாள். பெண்ணை மட்டும் தன்னுடன் வைத்துக் கொண்டாள்.

குடிகாரக் கணவனோ இவள் வேலைக்குப் போயிருந்த போது வீட்டிலுள்ள பாத்திரங்களை ஒவ்வொன்றாக விற்று குடிக்க ஆரம்பித்தான். வீட்டுக் குத்துவிளக்கு கூட விலைக்குப் போயிற்று! மப்பிலேயே கிடந்தான். இவளைப் போல் எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள். எத்தனையோ குடும்பங்கள் இருக்கின்றன. நேரில் கண்டேன். இந்தக் குடி தான் எத்தனைக் குடிகளைக் கெடுத்து தொலைக்கிறது? படித்தவர்களும் குடிக்கிறார்கள்.

படிக்காதவனும் குடிக்கிறார்கள். வித்தியாசம் ஒன்றுமில்லை. படித்த, வேலைக்குச் செல்லும் சில பெண்கள், சத்யாவைப் போன்ற சில பெண்கள் தைரியமாகப் பிரிந்து தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறார்கள். எனக்கும் வேறு ஊருக்கு மாற்றலாகியது. எத்தனையோ ஊர்களில் இருந்திருக்கிறேன். அங்கும் இப்படியானவர்களுக்கு உதவியிருக்கிறேன்.

ஆனால் எங்குமே இந்த சத்யாவைப் போல் அன்புடனும், பாசத்துடனும் எங்கள் எல்லோரையும் உறவு சொல்லி அழைத்து எங்கள் குடும்பத்தில் ஒருவாராகி, எங்களையும், பாட்டியைத் தன் பாட்டி போன்று அக்கறையுடனும் கவனித்தவர்கள் யாரும் இல்லை என்றே சொல்லலாம்.. அதுவும் பணத்தின் பின் ஓடும் இன்றைய உலகில். அப்படி எங்களுடன் எங்கள் மனதில் ஒட்டிக் கொண்டுவிட்டாள். எனவே தொடர்பில் இருக்கிறோம் என்று சொல்லிப் பிரிந்தோம். எங்கள் எல்லார் மனதிலும் இவள் ஒட்டிக் கொண்டதாலோ என்னவோ இவளைப் பற்றி எழுத வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

இரு ஊர்களுக்கும் 4 மணி நேரப் பயண இடைவெளிதான் என்பதால் ஓரிரு முறை எங்கள் வீட்டிற்கு அவள் வந்து சென்றாள். நானும் அந்த ஊரைக் கடந்து சென்ற போதெல்லாம் அவளைச் சந்தித்து எப்படி இருக்கிறாள் என்று அறிந்தும் வந்தேன். அவளுக்காக வங்கியில் ஒரு தொகை சேமித்தும் வந்தேன். அவள் கையில் கொடுப்பதை விட இது அவளுக்குப் பின்னாளில் உதவும் என்பதால்.

ஒரு நாள் சத்யா என்னை மொபைலில் தொடர்பு கொண்டு, “அண்ணே, ஏதாவது வழி சொல்லேன். முன்னாடி என்னமோ சொல்லுவியே ஏதோ குடிப்பழக்கத்த நிறுத்தற ஆஸூத்திரின்னு அது இங்க எங்கருக்குனு கொஞ்சம் சொல்லேன் எவ்வளவு ஆகும் சொல்லுண்ணே. இந்தாள அங்க கொண்டு சேர்த்துடலாம்......”

“அதுக்கு 12 ஆயிரத்துலருந்து 15 ஆயிரம் வரை ஆகும். அவங்களே சாப்பாடு, மருந்து எல்லாம் கொடுத்துருவாங்க. நீ அப்பப்ப அவங்க கவுன்சலிங்க் கூப்பிடும் போது போகணும்....ரூபாய்க்கு என்ன பண்ணுவ நீ?”

“தெரிலண்ணே என்னா பண்ணுறதுனு......கடன் தான்.”

நான் கொடுத்திருப்பேன். ஆனால், அவன் திருந்துவானா என்ற உறுதி இல்லாததால் உதவுவதில் தயக்கம் இருந்தது. அக்குழந்தைகளின் எதிர்காலம், படிப்பு என்றால் கொடுத்திருப்பேன்.

“சரி யோசிப்போம்...எங்க அம்மா அப்பாகிட்டயும் பேசிட்டு சொல்றேன். நீ வேலைக்குப் போ....உன்ன சாயந்திரம் கூப்பிடறேன்...”

மதியம் எனக்கு திடீரென்று சத்யாவிடமிருந்து அழைப்பு. என்னால் அட்டெண்ட் செய்ய முடியவில்லை. அம்மாவை அழைத்திருக்கிறாள். ஒரே அலறல்...”அம்மா இந்தக் கேடுகெட்ட குடிகார நாயி என் பொண்ணை....ஹையோ அதை நான் எப்படிச் சொல்லுவேன்...........கூப்பிட்டு படுத்தியிருக்கான்ம்மா. தே........மவன்...அவன் உருப்படுவானா........நாசமா போணும். என் பொண்ணு அவங்கிட்டருந்து தப்பிச்சு நான் வேலை செய்யுற கம்பெனிக்கே வந்து அழுதுகிட்டுருக்கு. எப்படிம்மா இனி நான் தனியா விட்டுட்டுப் போவேன் என் மவள?” அம்மா ஆடிப் போய்விட்டாள்.

அம்மா என்னிடம் விஷயத்தைச் சொன்னதும், என் மனமும் நொந்து போனது.

.

சத்யாவை அழைத்தேன்.

“சிவகாமிக்கு ஸ்கூல் இல்லியா?”

“இல்லண்ணே பரீட்சை நடக்குது... வீட்டுல இவன் குடிச்சுட்டு படுத்து கிடந்துருக்கான். சிவாமி மதியம் வீட்டுக்கு வந்ததும் இப்படி.....” என்று சொல்லுவதற்குள் அவள் குரல் உடைந்தது.

“நீ முதல்ல சிவாமிய கூட்டிட்டு என் ஃப்ரெண்ட் வீட்டுக்குப் போ. என் ஃப்ரெண்ட கூப்பிட்டுச் சொல்லறேன். உனக்குத்தான் வீடு தெரியுமே. நீ இங்க இருக்காத...நாம யோசிக்கலாம் அடுத்து என்ன செய்யறதுனு....”

“நாயி...பொறம்போக்கு நாயி.....அண்ணே ஏதாவது ஐடியா கொடு. அண்ணே நீ

சொல்லுண்ணே அவன நான் விஷம் வைச்சுக் கொன்னுரட்டுமா..யாருக்கும் தெரியாம...”

“ஏய்! உணர்ச்சிவசப்பட்டு அந்த மாதிரி எதுவும் செஞ்சு வைச்சுராத. அது உனக்கு ஆபத்து. உன் பிள்ளைங்களுக்கு நல்லதில்லை. நீ பக்கத்துல இருக்கற போலீஸ் ஸ்டேஷன்ல போயி கம்ப்ளெயின்ட் கொடு...நான் வந்து பார்த்துக்கறேன்.”

“அண்ணே ஏற்கனவே சிவாமி கொடுத்துருச்சு......அவங்க வந்து பார்த்துட்டு சும்மானாலும் இந்தாள மிரட்டிட்டுப் போனாங்க அம்புட்டுதான் ண்ணே”

“சரி நான் நாளைக்கு அங்க கிளம்பி வரேன்....யோசிக்கலாம்....என் ஃப்ரென்ட் வீட்டுக்குப் போ...வேற எதுவும் பண்ணி வைச்சுராத...என்ன?”

சத்யா சிவாமியை அழைத்துக் கொண்டு பக்கத்து ஏரியாவில் இருக்கும் என் அலுவலகத் தோழி வீட்டிற்குச் சென்றாள். மறு நாள் நான் அங்கு சென்று சுந்தரத்திடம் பேசலாம் என்று நினைத்தால் அவன் மப்பிலேயேதான் இருந்தான். தற்காலிகமாக, சத்யாவுக்கு வேறு வீடு பார்த்துக் கொடுத்து, அவர்களைக் குடித்தனம் வைத்துவிட்டு அந்த வார இறுதியில் வந்து அவனை, குடிபோதை மீட்பு மையத்தில் விசாரித்துச் சேர்க்க முடிவு செய்யலாம் என்று சொல்லிவிட்டு ஊருக்கு வந்துவிட்டேன். என் தோழியிடமும் அவள் கணவரிடமும் கலந்தாலோசித்தேன். இப்படியான பெண்களுக்கு ஒரு மறுவாழ்வு மையம் ஏதாவது தொடங்கிச் செய்யலாமா என்று பிள்ளையார்ச் சுழியும் போட்டோம்.

இரண்டு நாட்களில் மீண்டும் சத்யாவிடமிருந்து அழைப்பு.

“அண்ணே, சுந்தரம் மப்புல மாடிப்படிலருந்து உருண்டு கீழ விழுந்துட்டான். அந்த வீட்டுல குடியிருக்கற பசங்க ஃபோன் போட்டுச்சுங்க. இடுப்பெலும்பு முறிஞ்சு ஆஸ்பத்திரில பெட்ல சேர்த்துருக்கானுங்க. ஐசியு ல வைச்சுருக்காங்க......நான் இப்ப ஆஸுத்திரிலருந்துதான் பேசுறேன் ண்ணே....”.

எனக்குப் பெருமூச்சுதான் வந்தது. “ம் அவன் எப்படி இருக்கான் இப்ப? அப்படியே அந்த டாக்டர்கள்கிட்ட கேட்டு அவனை குடியிலிருந்து மீட்க அங்கேயே ஏதேனும் செய்வாங்களா, என்ன செய்யலாம்னு கேளு“ உளறிக்கிட்டுருக் கான் அவன். மூளை பேதலிச்சுருச்சாம். டாக்டருங்க இடுப்புல ஏதோ ஆப்பரேஷன் ப ண்ணனும்னு சொல்லுறாங்க. கெவெர்மென்டு ஆஸுத்திரிதான். அவங்க அண்ணன் கொஞ்சம் காசு கொடுத்துருக்காரு.....”

“நீ என்ன பண்ணப் போற”

“ஒன்னும் வேண்டாம்ண்ணே நீயே ஊர் ஊரா சுத்திட்டு பிஸியா இருக்க.

சும்மா உனக்கு செய்திதான் சொன்னேன்...அம்மா அப்பா பாட்டி எல்லாரும் நல்லாருக்காங்களா? நீங்க எல்லாரும் இங்க இருந்த வரை எனக்கு நிறைய சொல்லிக் கொடுத்து உதவி செஞ்சுருக்கீங்க. நல்லாருந்துச்சுண்ணே. உங்களை என்னால மறக்கவே முடியாது. இப்ப என்ன செய்யறது?...இவனை .பாத்துகிட வேண்டியதுதான்..."

10 நாள் கழித்து மீண்டும் சத்யாவிடமிருந்து அழைப்பு..

"அண்ணே, திரும்ப எங்க வீட்டு மொட்டைமாடிக்கே வந்துட்டேன் ண்ணே......"

"ஓ! சுந்தரமுமா? எப்படி அவனை மேல கொண்டு போன? பத்திரமா இரும்மா. பொண்ணை பத்திரமா பாத்துக்க. கடைசில நீ எடுத்த வீர சபதத்துக்கு எத்தனை சோதனைகள் பாரு."

"இங்க கீழ குடியிருக்கற பையனுங்க சுந்தரத்தை மேல கொண்டு வர ஹெல்ப்பு செஞ்சானுங்க. இப்ப அவனால ஒன்னும் செய்ய முடியாது....அசையக் கூட முடியாது.... இடுப்பு போச்சு....... இன்னும் எம்புட்டு நாளோ தெரியலை....போனா போகுதுனு கோபத்த விட்டு .வந்துட்டேன்ண்ணே....."

"சரி, உடனே ஏதாச்சும் உதவி வேணும்னா என் ஃப்ரெண்டையும் கான்டாக்ட் பண்ணு, எனக்கும் சொல்லு. என்ன?"

"ஏண்டா சிவா! ஃபோன்ல சத்யாவா? என்னவாம்?" அம்மா, பாட்டி, அப்பாவுக்கு சத்யாவைப் பற்றி அறியும் ஆர்வம். நான் அவள் சொன்னதை சொன்னேன்.

கொஞ்ச நேரத்தில் அம்மா காஃபியுடன் வந்தாள்.

"என்னவோ ஒன் ஃப்ரென்ட் சீதை ராமனை மன்னித்தாள் னு முடியணும்னு கதை எழுதக் கேட்டிருந்தார்னு சொன்னியே. அடித்தட்டு வர்கத்தின் மன்னிப்பு பத்தி எழுதனும்னியே எழுதிட்டுருக்கியோ"

"அதெல்லாம் ரெண்டு வருஷத்துக்கும் மேல ஆகுது. அதுக்கு எழுத முடியலை. இது இப்ப சும்மா இவ கதைய இது வரைக்கும் எழுதிட்டேன்."

"போறும் போ. சத்யா சீதையாக்கும்? சுந்தரம்-ராமனை??!! மன்னிச்சுட்டாளாக்கும். அது சரி அவன் என்ன ராமனா? அம்புட்டுத்தானா கதை"

"ஹா ஹா ஹா ஹா. பாட்டி அவ கதையெல்லாம் சுபம் போட்டு முடியற கதையா என்ன? தொடர்கதை தான்"

"என்னவோ போ. அந்த அசடுக்கும்தான் ஒரு விடிவு காலம் பொறக்காதோ?"

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

## கேள்வி - பதில்கள்

### ஒரு நபரை முதன்முதலாக சந்திக்கும்போது நீங்கள் கவனிக்கும் முதல் விஷயம் எது ?

ஏஞ்சல் :

1, நமக்கு கஷ்டத்தை வேதனைகளை கொடுத்தவங்களுக்கும் அன்பை தரணும் என்பது ப்ராக்டிகலா சரியா வருமா ?ஏதேனும் ஒரு கட்டத்தில் பழைய வலியின் வடுக்கள் வலிகளை நினைவுகூறாதா ?

# என் அனுபவத்தில் சொல்கிறேன். நமக்குக் கஷ்டத்தை அல்லது வேதனையைக் கொடுத்தவர்கள் பற்றிய கோபம் சில நாட்களில் நிச்சயமாக மறைந்து விடும் . அந்தச் செயல் குறித்த நினைவு இருக்குமே தவிர, அதுபற்றி எந்தக் கோபமும் வருத்தமும் இருக்காது.

& க + வே கொடுத்தவர்களுக்கு உடனேயே அன்பைத் தரவேண்டுமா அல்லது அப்புறமாகத் தரணுமா? உடனேயே கொடுத்தால், அவர் சரிதான் - இவன் ரொம்ப நல்லவன் - எவ்வளவு அடிச்சாலும் தாங்கிக்கறான் என்று நினைத்து இன்னும் இன்னும் சீண்டுவார். உடனடி எதிர்வினை ஒன்றும் செய்யாமல், புன்னகையோடு கடந்து சென்றுவிட்டு, சிறிது காலம் கழித்து அவர் நம்மை நாடி வந்தால், இன்முகத்தோடு உதவி செய்யலாம்.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்
நாண நன்னயம் செய்துவிடல்

2,சுயமரியாதை என்பது என்ன ?

# தான் அனாவசியமாகக் கேவலப்படுத்தப் படுவதை அல்லது இழிவு செய்யப்படுவதைப் பொறுத்துக் கொண்டு இராது அதை எதிர்த்துப் போராடும் குணம் கொண்டவராக இருப்பது சுயமரியாதைக்காரர்களுக்கான அடையாளம்.

& நம்மை மற்றவர்கள் மதிக்கவேண்டும் என்றால், முதலில் நம்மை நாமே மதிக்கவேண்டும். அதே போல் மற்றவர்களுக்கு நாம் என்ன தருகிறோமோ அதுவேதான் நமக்குக் கிடைக்கும். மற்றவர்களுக்கும் மரியாதை கொடுத்து, நமக்கும் நாமே மரியாதை கொடுப்பது சுயமரியாதை.

3, நட்பில் ஈகோ பார்ப்பது சரியா ? தவறா ?

# நட்பில் ஈகோ காட்டப்பட வேண்டிய தருணம் வருவது எந்த

அடிப்படையில் , என்பதைக் கொண்டு தான் நட்பில் ஈகோ பார்க்கலாமா கூடாதா என்று சொல்ல முடியும். நமது மிக நெருங்கிய நண்பர் ஆனாலும் நம் சுயமரியாதையை பாதிக்கக்கூடிய ஒரு செயலைச் செய்தார் என்றால் அப்போது ஈகோ காட்டாமல் இருக்க முடியாது.

& தவறு.

4, எதற்கும் ஒரு அளவு உண்டு என்பதில் உடன்படுகிறீர்களா ? அன்புகாட்டுவதிலும் பரிவு காட்டுவதிலும் அக்கறைகாட்டுவதிலும்கூட அளவுகோல் தேவையா ?

# அன்பையும் அக்கறையையும் இவ்வளவு என்று அளக்கக் கூடிய சாத்தியம் உண்டா ? இவரிடத்தில் கொஞ்சம் அன்பு அவரிடத்தில் அதைவிடக் கொஞ்சம் அதிகமான அன்பு என்று சொல்ல முடியுமா என்ன ?

& அன்பு, பரிவு, அக்கறை எல்லாவற்றுக்கும் கொடுப்பவரையும் பெற்றுக்கொள்பவரையும் பொருத்த விஷயங்கள். அதிலும் அளவு எல்லாம் ஒன்றும் இருக்க வாய்ப்பு இல்லை. ஒரு தாய் தன் குழந்தைகளிடம் அன்பு, அறிவு, பரிவு எல்லாம் அளவுகடந்து கொடுக்கலாம். ஆனால் அதே அளவில் அவற்றை, வெளியாட்கள் யாரும் கொடுக்க இயலாது.

5, நீங்கள் பேசிப்பழகும் ஒருவர் உங்களிடம் // எனக்கு உன்னை கூட நம்ப பயமா இருக்கு யாரையும் நம்ப மாட்டேன் //என்றால் எப்படி ரியாக்ட் செய்வீங்க ?

# "உன்னைக் கூட" என்று அவர் சொல்வதிலிருந்தே என்னை அவர் ஒரு உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்க்கிறார் என்பது தெளிவாகிறது. அது எனக்கு மகிழ்ச்சியை மட்டுமே தரும் அல்லவா ?

& என்னிடம் அப்படி யாராவது சொன்னால், " எனக்கும் அப்படித்தான் " என்று சொல்லிவிடுவேன்!

6,இப்போதெல்லாம் நம் தாய்தமிழ்நாட்டில் மக்கள் குறிப்பா அதிக அளவில் பெண்கள் பொதுவெளியில் அதிகமாக காதுகூசும் அளவு வார்த்தைவசவுகளை பேசுகிறார்களே ! இது எதை நமக்கு உணர்த்துகிறது ? இதன் காரணம் என்ன ?

# அந்த மாதிரி வெளியில் நமது பெண்கள் இழிவான வார்த்தைகளைப் பேசுவதைக் கேட்கும் துர்பாக்கியம் எனக்கு இதுவரை நேரவில்லை. கடவுளுக்கு நன்றி.

ஆசை வெட்கம் அறியாதென்பார்கள். ஸ்டைல் மேல் பற்றும் வெட்கம் கெட்ட விஷயம் தான் போலிருக்கிறது.

& Offence is the best sort of defense என்று நினைக்கிறார்களோ? நெருங்கிய உறவினர் ஒருவர் ஓட்டிய காரில் அவரோடு ஒருமுறை பயணித்தேன். முன்னால் சென்ற கார் ரயில்வே கேட் அருகில் திடீர் ப்ரேக் போட்டு நிற்க, பின்னால் சென்ற எங்கள் கார், முன் காரின் பின் பகுதியில் லேசாக மோதி, அந்தக் காருக்கு சிறிய சேதம். என் உறவினர் உடனே காரை விட்டு இறங்கி நேரே அந்தக் காரின் ஓட்டுனரை நோக்கிச் சென்று 'கன்னா பின்னா காச் மூச் ' என்று கத்தி, " ஏனையா இப்படி அஜாக்கிரதையாக வண்டி ஓட்டுகிறீர்கள் " என்று கேட்டார். அந்த கார் ஓட்டுனர் பணிவாக 'சாரி' சொன்னதும், இவர் வெற்றிப் புன்னகையோடு திரும்பினார். அப்புறம் அவர் என்னிடம், " ஆக்சுவலா தப்பு என் மேலதான். ஆனால் நான் சும்மா இருந்திருந்தா அவன் இறங்கி வந்து அவனுடைய காரின் சேதத்தைப் பார்த்து, என்னைப் பார்த்து கத்தி, என்னிடம் இழப்பீடு கேட்டிருப்பான்" என்றார்! இது விசித்திரமாக இல்லையா!

7, சில நேரத்தில் தொடர் உரையாடலில் நமக்கு ஒரு சம்பவம் நினைவிற்கு வரும் அதை விறுவிறுப்பை எழுதிட்டு அச்சோ இதை படிக்கும் யாருக்கும் இந்த பதில் மனக்கிலேசத்தை உண்டு பண்ணக்கூடாததுன்னு எழுதாம விட்டிருப்பேன் அப்படி உங்களுக்கும் ஏற்பட்டதுண்டா ?
இன்னிக்கும் ஒரு பதில் எழுதி வேண்டாம்னு விட்டுட்டேன் அமானுஷ்ய சம்பவங்கள் பற்றி :))))))))))

# என் பதில் பிறருக்கு மனக் கிலேசத்தை எப்போது உண்டு பண்ணும் என்று தெரியவில்லை . " நேற்று ஒரு பேயோடு பேசிக் கொண்டிருந்தேன்" என்று நான் சொன்னால் ஒருவேளை அதைப் படிக்கும் பலருக்கும் மனக்கிலேசம் ஏற்படலாம். அதற்காக நான் அதைச் சொல்லாமல் இருக்க வேண்டும் என்று ஆகிவிடுமா ?

பேய் : " ஆ ! இந்த # என்னோடு பேசியதை எல்லாம் இப்படி வெளியே சொல்கிறாரே!"

& சில சமயங்கள் எனக்கும் அது நிகழ்வதுண்டு. சில பதில்களில் சில சம்பவங்கள் எழுதி முடித்துவிட்டு அப்புறம் கொஞ்சம் யோசனை செய்து, அவற்றை நீக்கிவிடுவேன். இப்படித்தான் ஒருமுறை என்ன நடந்தது என்றால் ..... அப்போ நான் ஐந்தாம் வகுப்பு படித்துக் ............

**8, நன்மைக்கும் தீமைக்கும் சம்பந்தம் தொடர்பு இருக்கா ? நீட்டி முழக்கி நீதி நேர்மை நியாயம் என்று பேசுபவர்களின் நெருங்கிய தொடர்பில் அநீதிக்கே இலக்கணமானோர் இருப்பது மிகவும் குழப்புகிறதே ???**

# தீமை என்று ஒன்று இல்லாவிட்டால் நன்மை என்று ஒன்று இருக்க முடியாது அல்லவா ? மேலும் தீயோர் கேண்மை சிலசமயம் தவிர்க்க இயலாததாகப் போவதுண்டு.

& நன்மைக்கும் தீமைக்கும் உள்ள தொடர்பு, உண்மைக்கும் பொய்க்கும் உள்ள தொடர்பு போன்றது. நேர் <-> எதிர் விஷயங்களில் எப்படி தொடர்பு இருக்க முடியும்! நி, நீ, நே பேசுபவர்களின் தொடர்பில் அ இ இருப்பதற்கு ஒரே ஒரு காரணம் சொல்லலாம் - Unlike poles attract each other!

**9, சவால்களை எதிர்கொள்ளும் திறமை வருங்கால சந்ததிகளுக்குண்டா ? அவர்கள் எதிர்கொள்ளவிருக்கும் சவால் களில் முதல் 3 இடங்களில் எவை இருக்கும் ?**

# சவால்களை எதிர்கொள்ளும் திறன் எல்லாருக்கும் இருக்கிறது. எதிர்காலத்தில் நம் மக்கள் எதிர்கொள்ள வேண்டிய முதல் மூன்று சவால்கள் என்று சொல்வதனால், லஞ்சம், நேர்மையின்மை, முரட்டுத்தனம் ஆகியவற்றைச் சொல்லலாம்.

& சவால்களை வருங்கால சந்ததிகள் திறமையாக எதிர்கொள்வார்கள் என்னும் நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இன்றளவில் எனக்குத் தோன்றுகின்ற மூன்று சவால்கள்: தொற்று நோய்கள் பரவாமல் காத்துக்கொள்வது, மற்ற மனிதர்களுடன் சுமுகமாக நடந்துகொள்வது, வாழ்க்கையில் குறிக்கோள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதனை அடைய உழைப்பது.

**10, ஒரு நபரை முன்பின் தெரியாதவரை முதன்முதலாக சந்திக்கும்போது நீங்கள் கவனிக்கும் முதல் விஷயம் எது ? ஏன் ?**

# அவர் முகம் திருப்தி மகிழ்ச்சி அமைதி முதலிய உணர்வுகளை பிரதிபலிக்கிறதா எனப் பார்ப்பதுண்டு. இதற்கு பிரத்யேகமான காரணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இது என் இயல்பு. அவ்வளவு தான்.

& அவருடைய முகபாவம். சுமுகமானவரா அல்லது சிடுமூஞ்சியா என்று பார்ப்பேன். பேசும்போது அவருடைய கண்களையும், அவருடைய (சை)கைகளையும் கவனிப்பேன். ஆள் எப்பேர்ப்பட்டவர் என்று ஒரு ஐடியா

கிடைத்துவிடும். ஆனால் அது முதல் impression மட்டுமே அன்றி முடிவான impression இல்லை.

பானுமதி வெங்கடேஸ்வரன் :

பணக்காரர்கள் என்றால் குழந்தைகள்மீது பாசம் காட்ட மாட்டார்கள் என்று ஏன் நினைக்கிறோம்? அவர்கள் quality time கொடுக்கலாமே?

# அப்படியா நினைக்கிறோம் ? நினைத்தால் அது தவறு.

& லாமே!

பால், பிராண்ட் மாற்றுவதில்லை, காபி பொடியும் அப்படியே. போடுபவரும் மாறுவதில்லை(நான்தான் போடுகிறேன்) அப்படி இருந்தாலும் இன்று அமைந்த காபி மாதிரி அருமையான காபி ஏன் தினமும் அமைவதில்லை?

# பால் பிராண்ட் ஒன்றேயானாலும் தரம் ஒரேமாதிரி இருப்பதில்லை என்பதைக் கவனித்திருக்கிறேன்.

& 1) நேரத்தில் எழுந்திருக்கிறோம். சரியான நேரத்திற்கு பால் வீட்டுக்கு வந்துவிட்டது. வீட்டில் இனிமையான மெல்லிய இசை / பாட்டு கேட்டுக்கொண்டிருக்கிறது. அதிக பட்சம் 50 ppm TDS value இருக்கின்ற தண்ணீரை 99 deg C அளவுக்கு சூடு செய்து, பில்டரில் சரியான அளவுக்கு எடுத்துக்கொண்ட Coorg pure (No Chicory) காபிப்பொடியின் மீது பரவலாக ஊற்றி, டிகாக்ஷன் இறங்கும் வரை பொறுமையாக, காபி ராகத்தில் 'என்ன தவம் செய்தனை ' என்று ஹம் செய்கிறோம். பால் பொங்குவதற்கு முன்பாக ஸ்டவ்வை அனைத்து, பாலை எடுத்து டிகாக்ஷன் கலந்து, சர்க்கரை போட்டு, இரண்டு ஆற்று ஆற்றி, பிறகு காபியை ஓரிடத்தில் அமர்ந்து சிறிது சிறிதாக ரசித்து உறிஞ்சுகிறோம். தேவாமிர்தம் இதுதான்.

2) லேட்டாக எழுந்திருக்கிறோம், அதே பால்தான் ஆனால் வந்தது லேட். வீட்டுல கரண்டு இல்லை. பக்கத்து வீட்டில் என்னவோ உரக்க சண்டை போட்டுக்கொண்டிருக்கும் ஓசை கேட்கிறது. கரண்ட் இல்லாததால் தண்ணீர் பில்டர் இயந்திரம் ஓடவில்லை. குழாய்த் தண்ணீரை உபயோகித்து டிகாக்ஷன் போடுகிறோம். வெளிச்சம் இல்லாததால், தண்ணீரின் கொதிநிலை, அளவு இதெல்லாம் சரியாக தெரியவில்லை. ஊற்றும்போது சிறிது வெந்நீர் வெளியே சிந்தி கால்களில் பட்டு சுடுகிறது. டிகாக்ஷன் இறங்காமல் மக்கர் செய்கிறது. பில்டரை 'டொாங் டொாங்' என்று தட்டி டிகாக்ஷன் தயார் செய்கிறோம். பால் பொங்கியபிறகு ஸ்டவ்வை அவசரமாக அணைக்கிறோம். பால் பாத்திரம் கையாளும்போது கைகளில் லேசாக

சுட்டுவிடுகிறது. அவசரமாகத் தயாரித்த காபியை கொஞ்சம் ருசி பார்த்ததில் நாக்கில் சுட்டு சுவையரும்புகளை பதம் பார்த்துவிடுகிறது. இந்த காபி ஏன் தேவாமிர்தமாக இல்லை?

ஒரு காபி குடிக்கிறீர்கள், பிரமாதமாய் இருக்கிறது. உடனே இன்னொரு அரை கப் கிடைக்குமா? என்று கேட்டு வாங்கி குடிப்பீர்களா? அல்லது ஏதோ நல்லதாக ஒரு முறை கிடைத்து விட்டது, அதோடு நிறுத்திக் கொள்ளலாம், மீண்டும் குடிக்க ஆசைப்பட்டு, அது எப்படி அமையுமோ? வாயை கெடுத்துக் கொள்ள வேண்டாம் என்று நிறுத்திக் கொண்டு விடுவீர்களா?

# பிடித்திருந்தால் கேட்க வெட்கப் பட மாட்டேன். ஆனால் காபி டீ " இன்னும் கொஞ்சம் வேண்டும் " என்று கேட்கத் தோன்றாது.

& காபி குடிக்கும் பழக்கத்தை நிறுத்தி கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. ஆனாலும் நான் இரண்டாவது வகை ஆசாமி. நல்லதாக ஒருமுறை கிடைத்துவிட்டது. அது போதும்.

ஒரு கலைப் படைப்பை ரசிக்கும் பொழுது அந்த படைப்பாளி எடுத்துக் கொண்ட விஷயத்தை எப்படி அளித்திருக்கிறார் என்று பார்த்தால் போதாதா? கையினோரு தராசோடு உட்கார வேண்டுமா?

# விமர்சனப் பார்வை மனித இயல்பு. அது மறக்கப்படும் அளவுக்குக் கலைநயம் இருப்பது பார்ப்பவரின் நல்லதிருஷ்டம்.

& நான் பொழுபோக்கிற்காக மட்டுமே கலைப்படைப்புகள் பக்கம் செல்பவன். தராசு எதுவும் எடுத்துச் செல்வதில்லை.

**Karl Benz** patented the three-wheeled **Motor Car**, known as the "**Motorwagen**," in 1886. It was the first true, modern automobile. **Benz** also patented his own throttle system, spark plugs, gear shifters, a water radiator, a carburetor and other fundamentals to the automobile.

# யார் நீ? ஸ்ரீராம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

### அந்த மாலை 2/4

"அவன் பேர் வினோத். என் பேர் வினோதினி. இந்த விஷயமே எங்களை ஒருவரை ஒருவர் பார்க்க வச்சுது அங்கிள்..."

"......................."

"என்ன அங்கிள்... நல்லா பேசுவீங்கன்னு வினோத் சொன்னான். சும்மாவே இருக்கீங்க... எங்களுக்குள்ள முதல்ல சண்டைதான் வந்து கொண்டிருந்தது. ஒரே மாதிரி பேர்ங்கறதால பிரெண்ட்ஸ் கிண்டல் அடிச்சாலும் இவன் ஒதுங்கி ஒதுங்கிப் போனான். போகப்போக அண்டர்ஸ்டேண்டிங் வந்துடுச்சு..."

அண்டர்ஸ்டேண்டிங்கா? அப்படீன்னா?

அவளையே பார்த்தார் மூர்த்தி. "வினோத் ஒண்ணும் சொன்னதே இல்லையே... கல்யாணமே வேண்டாம்னுதான் சொல்றான்...நீ யாரையாவது பார்த்திருந்தா சொல்லுன்னு கூட கேட்டுப் பார்த்தும் இல்லைன்னுதானே சொன்னான்?"

"பொய் அங்கிள்... நாங்க ஒரு வருஷமா பழகறோம்.."

"ஏன் பொய் சொல்லணும்? நாங்க அவனுக்கு கல்யாணம் பண்ணணும்னுதான துடிச்சுக்கிட்டிருக்கோம்... வேற ஏதாவது சொல்லக் கூடாத பிரச்னை இருக்கா?"

"அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை அங்கிள்... நீங்களும் லவ் மேரேஜ்னு வினோத் சொல்லி இருக்கான். நீங்க உங்க மேட்டரை உங்க அப்பாம்மா கிட்ட ரொம்ப வித்தியாசமா ப்ரசண்ட் பண்ணினீங்களாம்... இவனுக்கு நீங்க கேட்டும் கூட உங்களிடம் சொல்ல என்னவோ தயக்கம்... என்ன இருந்தாலும் இதற்கு எல்லாம் பேரன்ட்ஸ் கிட்ட சொல்ல ஒரு தயக்கம் நேச்சுரலாவே இருக்கும்தானே? அவனே பார்த்தா கூட உங்க ஜாதியிலேயே பாருன்னு சொன்னீங்களாமே... சொன்னான். என்ன அங்கிள் அப்படிப் பார்க்கறீங்க... நான் வேற ஜாதி இல்லை.. கவலைப்படாதீங்க.. ஓ.. அவன் இவன்னு சொல்றேனேன்னு பார்க்கறீங்களா... அவர் இவர்னுல்லாம் உங்களுக்காக சொல்லலாம், இம்ப்ரஸ் பண்ணலாம்.. ஆனா நாங்க அப்படி பேசிக்கறதில்ல அங்கிள்... எதுக்கு போலித்தனமா... எனக்கு அதெல்லாம் பிடிக்காது... இப்போ கூட படபடன்னு பேசிகிட்டீங்களாமே... கல்யாணமே வேண்டாம்னு சொன்னானாமே... ரொம்பக் கவலை ஆயிட்டீங்க போல..."

திடீரென வந்து எதிரே உட்கார்ந்து படபடவென பேசும் அந்தப் பெண்ணை நிதானமாகப் பார்த்தார் மூர்த்தி.

என்ன பெண் இவள்... நிஜம் பேசுகிறாளா? பொய்யா? இப்படிக் கூட வந்து பேசுவார்களா? சற்றுமுன் நடந்ததைக் கூடச் சொல்கிறாளே...

"என்ன அங்கிள்.. இப்படியெல்லாம் பேசறாளேன்னு பார்க்கறீங்களா... வினோத்திடம் விஷயத்தை விட்டா இழுத்தடிச்சுடுவான் அங்கிள்... அவன் எப்பவுமே அப்படிதான்... உங்களுக்குத் தெரியாதா? வயசாவுது இல்ல... சட்டுபுட்டுனு விஷயத்தை ஓபன் பண்ணுடான்னா கேட்க மாட்டேங்கறான்... ஸாரி அங்கிள்... நான் அவன் இவன்னு சொல்றது பழக உங்களுக்கு கொஞ்ச நாளாகும்..."

"உன்னைப்பற்றி சொல்லு"

"நான் வீட்டுக்கு ஒரே பொண்ணு... நோ சிஸ்டர்ஸ்... நோ பிரதர்ஸ்... எங்கப்பா போன மாசம்தான் ரிடையர் ஆனார். அவர் என்னிடம் ரொம்பப் பிரியமா இருப்பார். என்ன பார்க்கறீங்க... அவருக்குத் தெரியுமான்னு கேட்க நினைக்கறீங்க... கரெக்ட்டா? தெரியும் அங்கிள்... வினோத் மாதிரி இழுத்தடிக்க விரும்பலை நான். முன்னாடியே சொல்லிட்டேன். ஒரே ஒரு விஷயம் என்ன தெரியுமா அங்கிள்... எனக்கும் வினோத்துக்கு மூணு மாசம்தான் வயசு வித்தியாசம். பயப்படாதீங்க. நான் மூணு மாசம் சின்னவள்!" சிரித்தாள் வினோதினி.

"உன் நட்சத்திரம்?"

"உத்திரம் அங்கிள்... உங்க பையன் புனர்பூசம் இல்லையா... பொருந்தும். கவலைப்படாதீங்க.. வேற கோத்ரம்தான். அதுவும் பிரச்னை இல்லை. ஜாதகத்துல பத்துக்கு ஏழு பொருத்தம் இருக்கு.. நானே பார்த்துட்டேன்."

"உனக்கு ஜாதகம் பார்க்கத் தெரியுமா? "

"தெரியும் அங்கிள்... கத்துக்கிட்டேன்"

"உங்கப்பாவுக்கு இதில் முழு சம்மதமா? அவருக்கு ஒண்ணும் வருத்தமில்லையா?"

"வருத்தம் ஆரம்பத்துல இல்லாம இருக்குமா? இருந்தது. அப்புறம் சமாதானமாயிட்டார்... யு நோ அங்கிள்.. அம்மா இல்லைங்கறதால நான் அவருக்கு ரொம்ப செல்லம். இருந்தாலும், இருங்க... அவரையே கேட்டுடலாமே..." போனை எடுத்தவள் அப்பாவின் பெயரைத் தெரிவு செய்து கால் செய்தாள்.

"வேண்டாம்.. வேண்டாம்.. அவர் கூட நான் இப்போ பேச விரும்பலை"

போனைக் கீழே வைத்து விட்டாள் வினோதினி. மூர்த்தி விட்ட பெருமூச்சு முடியும் முன் அந்த அறைக்குள் நுழைந்தவரைப் புன்னகையுடன் வரவேற்றாள் வினோதினி.

"அப்பா..." என்று மூர்த்தியைப் பார்த்தவள், அப்பாவிடம் "அங்கிள்" என்றாள்.

"தெரியுமே... போட்டோ காமிச்சுருக்கியே.." என்று புன்னகைத்தார் அவர். "ஐயம் பாலாஜி" என்றார் இவருக்காக கைநீட்டி.

அவர் விரல்களைத் தொட்டு கையை இழுத்துக் கொண்டவர் "ஃபோட்டோவா?" என்றார்.

"அப்பா... " என்று அவரைப் பார்த்தவள், 'ஓ... கமான் அங்கிள்... நாங்க ஒரு வருஷமா பழகறோம்... உங்க ஃபோட்டோ என்கிட்டே இருக்காதா?"

மூர்த்தி புன்னகைக்கவில்லை.

பாலாஜியைப் பார்த்தார். "உங்களுக்கு இதில் சம்மதமா? வருத்தம் ஒன்றும் இல்லையா? என் பையன் பற்றி உங்களுக்குத் தெரியுமா?"

"ஓ... நல்லாத் தெரியும்... சில ஜோசியர்கள் உங்க பையன் ஜாதகத்துல செவ்வாய் தோஷம் இருக்குன்னு சொல்வாங்கன்னு கூட தெரியும். ஆனால் அதெல்லாம் இல்லை. எங்களுக்கு பிரச்னையும் இல்லை. என்ன பிரச்னை இருந்தால்தான் இனிமேல் என்ன செய்ய முடியும்? ரெண்டு பேரும் முடிவு பண்ணிட்டாங்க..."

"செவ்வாய் தோஷமா? என் பையனுக்கா?"

"அப்பா.. கொஞ்ச நேரம் சும்மா இருக்கீங்களா? கிரேஸி மோகன் டிராமால வர்ற கேரக்டர் மாதிரி வார்த்தைக்கு வார்த்தை ஏதாவது போட்டுக் கொடுத்துகிட்டே இருப்பீங்களா? அதெல்லாம் ஒண்ணும் இல்லை அங்கிள்..."

"அம்மா.. நீ ரொம்ப வேகமா இருக்கே... இது விளையாட்டில்லம்மா... என் பையன் கொஞ்சம் முன்கோபி.."

"ஐயோ... கொஞ்சமா...? வார்த்தைக்கு வார்த்தை எதிர்வாதம் பண்ணுவான்...எதையும் லேசுல ஒத்துக்க மாட்டான்..."

மூர்த்தி ஆச்சர்யமானாலும் அவள் குறிக்கிட்டதைத் தடை செய்து தொடர்ந்தார்.

"கொஞ்ச நாள் கழிச்சு எங்களுக்குள்ள ஒத்துவரல்ல... நாங்க பிரியறோம்னுல்லாம் சொல்லக் கூடாது.. நல்லா யோசிச்சு

முடிவெடுக்கணும்.. என்னைப்பொறுத்தவரை இந்தக் காலத்துப் பொண்ணுங்க, பையனுங்க எல்லாம் கல்யாண விஷயத்துல பொறுப்பு இல்லைன்னுதான் தோணுது...."

"அங்கிள்... அந்தக் கவலை எல்லாம் உங்களுக்கு வேணாம்... இன்னிக்கு எல்லாம் முடிவு செய்துடலாம். நீங்க பேசறதைப் பார்க்கும்போது உங்களுக்கு சம்மதம்னு தெரியுது...கரெக்ட்டா?"

வினோத்தும் வார்த்தைக்கு வார்த்தை "கரெக்ட்டா?" என்று கேட்பது நினைவுக்கு வந்தது.

இவளாகவே முடிவு செய்து கொள்கிறாளே... அவர் மௌனம் தொடர,

வினோதினி ஃபோனை எடுத்து விட்டு வைத்தாள்.

வினோத் உள்ளே நுழைந்தான். "அதுக்குள்ற என்னைக் கூப்பிட்டுட்டே.." என்றான் விநோதினியைப் பார்த்து. "அப்பா" என்று புன்னகைத்தான்.

மூர்த்தி செயலற்று அமர்ந்திருந்தார். 'சற்றுமுன்தான் என்னுடன் வார்த்தையாடினான்....'

சர்வர் இந்தப் பக்கமே நீண்ட நேரமாய் வரவில்லை. தூரமாய் நின்று கொண்டு பார்த்துக் கொண்டிருந்தார். மூர்த்திக்கு சந்தேகமாய் இருந்தது.

[ அடுத்த வாரம் ]
=================



மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# பலசரக்கு :: ஸ்ரீராம்

## பேஸ்புக்கில் பகிர்ந்த ஒரு பழைய பொக்கிஷம்...



**கீழ்க்கண்ட சம்பவத்திலிருந்து தெரிந்து கொள்ளும் விவரங்கள் :**

**- காந்திஜிக்கு ரத்தக்கொதிப்பு நோய் இருந்தது.**

**-காந்திஜி கூட பொறுமை இழந்து உணர்ச்சி வசப்பட்டு படபடவென பேசுவார்.**

**- அப்போது அதாவது 1927 இல் மைசூரில் இரவு ஒன்பது மணிக்கு 'அப்படி' ஒரு வழக்கம் இருந்தது!**

**இனி சம்பவத்துக்குப் போவோம்.**

**1927 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தென்னகத்துக்கு வந்திருந்தார். மைசூர் மகாராஜாவின் விருந்தாளியாக 'குமார பார்க்'கில் தங்கி இருந்தார். ராஜாஜியும் காந்தியுடன் சென்றிருந்தார்.**

**காந்திஜி ரத்தக்கொதிப்பு நோயால் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு அதிர்ச்சியான பேச்சு, சம்பவம் எதுவும் ஏற்படக்கூடாது என்பது டாக்டர்களின் உத்தரவு.**

**ஒருநாள் இரவு 8.30லிருந்து 9 மணி வரை ஒரு பெரியவருக்கு காந்திஜியுடன் பேட்டிக்கு நேரம் குறிக்கப்பட்டிருந்தது. அவரும் அந்த நேரத்தில் தயாராகக் காத்திருந்தார். ராஜாஜி அவரை 8.30 மணிக்கு காந்திஜி அறைக்குள் கொண்டுபோய் விட்டு விட்டு வந்தார்.**

**பத்து நிமிஷங்கள் ஆகியிருக்கும். உள்ளே பேச்சுக் குரல்கள் பலமாக ஆயிற்று. விவாதம் சூடாக இருந்ததை வெளியிலிருப்பவர்கள் உணரலானார்கள். இன்னும் 20 நிமிஷங்கள் இதே ரீதியில் போகுமானால் என்ன ஆகுமோ என்று காந்தி அன்பர்கள் தவிக்கலானார்கள். தவித்தவர்களில் ராஜாஜியும் இருந்தார்.**

**திடீரென்று 'குமார பார்க்'கில் விளக்குகள் எல்லாம் அணைந்தன. ஒரு வினாடிதான். சட்டென்று மறுபடியும் எரியத் தொடங்கின. எல்லோரும் தங்கள் கைக்கடிகாரங்களைப் பார்த்துக்கொண்டார்கள். எல்லாவற்றிலும் மணி 8;45 தான். ராஜாஜியும் கூடத் தன் பாக்கெட் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார். பிறகு பரபரப்புடன் காந்திஜியின் அறைக்குள் புகுந்தார்.**


**மின்சார விளக்குகள் ஒரு வினாடி அணைந்து மறுபடி எரிந்தால் அப்போது மணி ஒன்பது என்பதை மைசூரிலுள்ள அனைவரும் அறிவர். (சில ஊர்களில் நேரத்தை அறிவிக்க சங்குகளும், ஆலய மணிகளும், பீரங்கி முழக்கமும் இருப்பதைப்போல் மைசூரில் மணி ஒன்பது என்பதை அறிவிக்க விளக்குகள் ஒரு வினாடி அணைந்து எரியும் ஏற்பாட்டைச் செய்திருந்தனர்)**

**உள்ளே சென்ற ராஜாஜி காந்திஜியுடன் பெரியவருக்கான சந்திப்பு நேரம் முடிந்து விட்டது என்று கூறி அவரை வெளியே அழைத்து வந்து, ரொம்ப மரியாதையுடன் அவரை அனுப்பியும் வைத்தார்.**

**அந்தப் பெரியவர் சென்ற கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வழக்கப்படியான விளக்கணைப்பு மறுபடி நடந்தது. அப்போதுதான் மைசூர் நகரில் உண்மையான மணி ஒன்பது!**

**காந்திஜியின் அறைக்குள் வாக்குவாதங்களைக் கேட்டதும் ராஜாஜியின் வலக்கை அந்த மாளிகையின் மின்சார மெயினை இயக்கி மணி ஒன்பதாகச் செய்து விட்டது!**

**- கௌசிகன் எழுதிய 'ராஜாஜி' நூலிலிருந்து எடுத்து குமுதத்தில் வெளியானது!-**




==========================

**கடவுள் மாதிரி ஒரு புத்தகம் கிடைத்தது. வீடும் வண்டியும். ஆரம்பப் பக்கங்கள் கடைசிப் பக்கங்கள் காணோம்! எழுத்தாளர் பெயர் தெரியவில்லை.**

## புது இடம்

தாம்பரத்திலிருந்து தினந்தோறும் காரில் சென்னைக்கு வந்துகொண்டிருக்கும் நண்பர் ஒருவரை, ஒரு நாள் பஸ்ஸில் சந்தித்தேன்.

"கார் என்ன ஆயிற்று? பஸ்ஸில் வருவானேன்?" என்று கேட்டேன்.

"கார் அதோ போகிறது பந்துமித்திரர்களை ஏற்றிக் கொண்டு பெரம்பூருக்கு. நான் பஸ் சவாரி செய்கிறேன். அது கிடக்கிறது. சென்னையில் ஏதாவது ஜாகை கிடைக்குமா?" என்று விசாரித்தார் நண்பர்.


"நூற்று நாற்பத்து மூன்று" என்று எனக்குள் நானே சொல்லிக் கொண்டேன்.

"எங்கே, எங்கே, எங்கே அந்த வீடு?" என்று அவர் ஆவலோடு துடித்துக்கொண்டே கேட்டார்.

"வீடா? வீடு இருப்பதாக யார் சொன்னார்கள்? இது வரையில் நூற்று நாற்பத்து இரண்டு பேர் என்னை ஜாகை கிடைக்குமா என்று விசாரித்திருக்கிறார்கள். அந்த ஜாபிதாவில் உங்கள் நம்பர் நூற்று நாற்பத்து மூன்று. இதைத்தான் சொன்னேன்" என்றேன்.

நண்பர் இதற்குப் பிறகு என் முகத்தைக்கூடச் சிறிது நேரம் வரையில் பார்க்க மறுத்துவிட்டார்.

'அடடா! நண்பரை இவ்வளவு பரம துக்கத்தில் ஆழ்த்தி விட்டோமே!' என்று எனக்கே பச்சாதாபமாயிருந்தது. நண்பரைச் சமாதானப் படுத்துவதற்காக நானாகவே மறுபடியும் பேச்சுக் கொடுத்தேன்.



என்னடா இது நம் இலக்கிய அறிவுக்கு வந்த சோதனை என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது ஒருவழியாய் எழுத்தாளர் யார் என்றும் தெரிந்தது! இப்போது யாரென்றே சொல்லவில்லை. யாராவது பழைய ஆட்கள் கண்டு பிடிக்கிறார்களா என்று பார்த்துவிட்டு அந்தப் படத்தை இணைக்கிறேன்.

=========================

ஒரு மாதிரி வசனம் இல்லாமல் தானாய் புரிந்து கொள்ள வேண்டிய ஜோக். ஸ்ரீதர் ஜோக்...



## இன்னொரு புதிர்... இந்த ஓவியம் எந்த கதைக்கானது என்று சொல்ல முடிகிறதா?



[மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்]


## வி பா ஸ்ரீராம்

(அதாவது **வி**வரங்களும் **பா**டல்களும் தொகுத்து அளிப்பவர் : **ஸ்ரீ**ராம்)

### கடலுக்கு கூட ஈரமில்லையோ நியாயங்களை கேட்க யாருமில்லையோ

1982 இல் வெளியான பயணங்கள் முடிவதில்லை திரைப்படம் அதன் இயக்குனர் ஆர் சுந்தராஜனுக்கு மட்டும் முதல் படமல்ல, கோவைத்தம்பி - அதாவது மதர்லேண்ட் பிக்சர்ஸுக்கும் அதுவே முதல் படம். ஆனாலும் அப்போது அவர் அதை மதர்லேண்ட் பிக்சர்ஸ் என்று அறிவிக்காமல் தயாரிப்பாளர்களாய் மூன்று பெயர்கள் சொன்னார்.

அரசியலில் இருந்ததால் கோவைத்தம்பி படத்தயாரிப்பாளராய் மாற தயங்கினாராம். அப்போது சக அமைச்சராய் இருந்த அரங்கநாயகம் தைரியம் கொடுத்ததால் படத்தயாரிப்பில் இறங்க, படம் வெள்ளி விழா கண்டது. தமிழகத் திரையரங்குகளில் ஒரு வருடத்துக்கும் மேல் ஓடி சாதனை படைத்த படம்.




இளையராஜா இசை, எஸ் பி பி குரல், ஆர் சுந்தராஜனின் திரைக்கதை அனைத்தும் பத்திரிகைகளாலும் பொதுமக்களால் பெரிதும் பாராட்டப்பட்டனவாம். புதுக் தயாரிப்பாளர், புது இயக்குனர் என்பதால் இந்தப் படத்தில் நடிக்க முதலில்

பூர்ணிமா தயங்கினாராம். இளையராஜாதான் இசை என்று தெரிந்ததும் தேதி கொடுத்தாராம்.




இந்தப் படத்தின் பாடல்கள் எல்லாம் சூப்பர் ஹிட். வைகறையில் வைகைக்கரையில் பாடல் சுபபந்துவராளி ராக அடிப்படையிலும், மணி ஓசை கேட்டு எழுந்து பாடல் சிந்துபைரவி ராக அடிப்படையிலும், தோகை இளமையில் பாடல் லதாங்கி ராக அடிப்படையிலும் அமைக்கப்பட்டிருந்த பாடல்கள் என்று கங்கை அமரன் பின்னர் ஒரு பேட்டியில் சொல்லி இருந்தார். இந்தப் படத்தின் குத்துப்பாடல் வகையறாவான ஏ ஆத்தா ஆத்தோரமா பாடலிலும் கர்னாடிக் கலப்பு உண்டு என்று சொல்லி இருந்தார்.

பாடல்களை வைரமுத்து, கங்கை அமரன், முத்துலிங்கம் ஆகிய மூவரும் எழுதி இருக்கின்றனர்.




வைரமுத்து வரிகளில் எஸ் பி பாலசுப்ரமணியம் தனித்துப் பாடி இருக்கும் இந்தப் பாடலை ஹிந்தியில் கலாகார் என்று இந்தப் படத்தை எடுத்தபோது அப்படியே கிஷோரைப் பாட வைத்து

எடுத்தார்கள். கிட்டத்தட்ட இதே ராகம். சரணங்களில் கிஷோர் கொஞ்சம் உயரத்துக்குப் போவார். இந்தப் பாடலில் கிடார் முக்கிய பங்கு வகிக்கும்.

**இளைய நிலா பொழிகிறதே**
**இதயம் வரை நனைகிறதே**
**உலாப் போகும் மேகம்**
**கனாக் காணுமே விழாக் காணுமே**
**வானமே .....**

**வரும் வழியில் பனி மழையில்**
**பருவ நிலா தினம் நனையும்**
**முகிலெடுத்து முகம் துடைத்து**
**விடியும் வரை நடை பழகும்**
**வானவீதியில் மேக ஊர்வலம்**
**காணும் போதிலே ஆறுதல் தரும்**
**பருவ மகள் விழிகளிலே**
**கனவு வரும் ......**

**முகிலினங்கள் அலைகிறதே**
**முகவரிகள் தொலைந்தனவோ**
**முகவரிகள் தவறியதால்**
**அழுதிடுமோ அது மழையோ**
**நீலவானிலே வெள்ளி ஓடைகள்**
**போடுகின்றதே என்ன ஜாடைகள்**
**விண்வெளியில் விதைத்தது யார்**
**நவமணிகள்..**
காணொளி சுட்டி <<<<

அடுத்து வரும் இதுவும் வைரமுத்து எழுதிய பாடல். எஸ் பி பி - எஸ் ஜானகி பாடிய பாடல். காதலனைச் சந்திக்கக் காத்திருக்கிறாள் கைதூக்கிவிட்ட காதலி. காதலன் பிஸியாகிவிட்டான். நேரமில்லை அவனுக்கு. இடையில் காதலிக்கு ஒரு சிறு ' கால்ஷீட் ' கொடுத்து டூயட் பாடி மகிழ்வித்து, மகிழ்ந்து ஓடுகிறான்...

மின்நிலா 014

சாலை ஓரம் சோலை ஒன்று வாடும்
சங்கீதம் பாடும்
சாலை ஓரம் சோலை ஒன்று வாடும்
சங்கீதம் பாடும்
கண்ணாளனை பார்த்து கண்ணோரங்கள் வேர்த்து
கண்ணாளனை பார்த்து கண்ணோரங்கள் வேர்த்து.......

பாவை இவள் பார்த்து விட்டால் பாலைவனம் ஊற்றெடுக்கும்
கண்ணிமைகள் தான் அசைந்தால் நந்தவனக் காற்றடிக்கும்
நீங்கள் என்னை பார்த்தால் குளிரடிக்கும்
மனதுக்குள் ஏனோ மழை அடிக்கும்
ஹே பாரிஜாத வாசம் நேரம் பார்த்து வீசும்
பாரிஜாத வாசம் நேரம் பார்த்து வீசும்
மொட்டுக் கதவை பட்டு வண்டுகள் தட்டுகின்றதே இப்போது

கடற்கரை ஈரத்திலே காலடிகள் நீ பதிக்க
அலை வந்து அழித்ததினால் கன்னி மனம் தான் துடிக்க
கடலுக்கு கூட ஈரமில்லையோ
நியாயங்களை கேட்க யாருமில்லையோ
சேர்த்து வைத்த தாகம் கண்ணா என்று தீரும்
சேர்த்து வைத்த தாகம் கண்ணா என்று தீரும்
பேசும் கிள்ளையே ஈர முல்லையே
நேரமில்லையே இப்போது

காணொளி சுட்டி <<<<<<<<<<



மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

## B + (Be Positive) செய்திகள் : ஸ்ரீராம்

### குமாரும் நதியாவும் ஒரு வருடமாக....

1) கொரோனாவைக் கண்டு தனியார் மருத்துவமனைகளே நடுங்கும்போது, இவர் தாமாக முன்வந்து உதவுவது பாராட்டுக்குரியதே. கொரோனா காலத்தில் *150* நாட்களாக பொதுமக்களுக்கு இலவசமாக நிலவேம்பு, கபசுர குடிநீர் வழங்கி சித்தமருத்துவ சேவையில் ஈடுபட்டு வருகிறார் பழநி அரசு மருத்துவர் **மகேந்திரன்.**



2) திருவாரூர் வாளவாய்க்கால் பகுதியைச் சேர்ந்தவர் **ஆர்.வி.குமார்.** **இவரின் மனைவி நதியா.** இருவரும் நாட்டுப்புற இசைக் கலைஞர்கள். வள்ளலார்மீது கொண்ட பற்றால் ஆதரவற்றவர்களின் பசியைப் போக்க, கடந்த ஒரு வருடமாக தங்களது வருமானத்தின் ஒருபகுதியில் இருவரும் இலவச உணவு வழங்கி வருகின்றனர்.



3) உடலும் மனமும் சோர்ந்து தன்னைக் கவனித்துக்கொள்ளவே பலரும் சிரமப்படும் 85 வயதிலும் சமூகசேவை செய்வதற்காக, காலையிலேயே கிளம்பிவிடுகிறார் லலிதாம்மா.




4) 2010-ஆம் ஆண்டு சென்னை மதுரவாயில் காவல்நிலையத்துக்குப் பதவி உயர்வில் ஆய்வாளராக வந்த ஆனந்த்பாபு, சூளைமேடு பகுதியில் இருக்கும் திருநங்கைகளுக்கு ஆனந்த்பாபு ஒரு உற்ற தோழனாகவே இருக்கிறார். அவர்களின் மறுவாழ்வு, மாற்றுத்தொழில் ஏற்பாடு என உதவி செய்து வருகிறார்.




மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை ரமா ஸ்ரீநிவாசன்



என் அன்பு மிக்க தந்தையின் வருஷ திவசம் இம்மாதம் 9ஆம் தேதி எப்போதும் போல் நடைபெற இயலாமல் ஓர் இரண்ய சிரார்த்தமாக நடந்தேறியது. கொரோனா கலக்கத்தால் புரோகிதர்களும் வர மறுத்தனர். சமையல் செய்ய வெளி மனிதர்களை அனுமதிக்கும் தெம்பும் தைரியமும் என் சகோதரனுக்கு இல்லாததால் இவ்வருடம் என் தந்தைக்கு இரண்ய சிரார்த்தமாக அமைந்து விட்டது. அவர் அதை அவசியம் ஆமோதிப்பார் என்று நம்புகின்றேன்.

இந்நிகழ்ச்சியே என் இன்றய கட்டுரையின் தூண்டுகோல்.

என் கண்ணோட்டத்தில் என் தந்தை எனக்கு “one and only” ஹீரோ. நாம் பிறந்ததிலிருந்து முடிவு வரை ஒரு புல் பூண்டைக் கூட எதிர்பார்க்காமல் நமக்கு நன்மை ஒன்றயே செய்பவர் நம் தந்தையன்றி யாரும் இல்லை. ஒரு தாயின் கடமை தன் பிள்ளைகளை திறம்பட வளர்த்து, ஆளாக்கி நற்குணங்களை கற்பித்து நன்மக்களாக உலகுக்கு அளிப்பதில் இருக்கிறது.

ஆயின் ஓர் தந்தையின் வழி காட்டும் பயணம் பிள்ளை பேறு முதல் அவன் / அவள் வாழ்நாள் முழுக்க தொடருகின்றது.

இன்று வரை நான் குழப்பமான தருணங்களில் என் தந்தையின் புகைப்படத்திற்கு எதிரே நின்று வணங்குவது இயல்பான ஒரு செயல். விடை கொடுப்பார் என்பதில் சிறிதளவும் ஐயமே இல்லை. ஏனெனில் ஒவ்வொரு முறையும் எனக்கு தீர்க்கமான விடை கொடுத்திருக்கின்றார்.
குழந்தைகள் யாவரும் தங்கள் நான்காம் வயது முதல் ஓடிபஸ் காம்பிளக்ஸ் (Oedipus Complex) தாக்கத்தின் விளைவுகளை உணர்ச்சி பூர்வமாக அனுபவிப்பவர்கள். அம்முறையில்தான் நானும் என் அப்பாவிடம் ஒட்டிக்கொண்டேன். அவர் எது செய்தாலும் அது அதிசயம். அவர் எது சொன்னாலும் அது வேத வாக்கு.
ஒரு தாய் என்பவள் எப்படி பலப் பல பரிமாணங்களை எடுத்துத் தன்

பிள்ளைகளை சீரும் சிறப்புமாய் வளர்க்கின்றாளோ அதே போல் தந்தையும் அஷ்டாவதாரங்களை அனாயாசமாக எடுக்கும் ஓர் அரிய மனிதன்.

பிள்ளையின் வாழ்க்கையில் தந்தையின் பங்கானது அவன் / அவள் பிறப்பில் தொடங்கி அவர்கள் வாழ்க்கையில் ஒரு உயர்ந்த நிலையை அடையும் வரை எதிர் கொள்ளும் ஒவ்வொரு போராட்டத்திலும் ஒவ்வொரு முன்னேற்றத்திலும் வியர்வைத் துளிகளாக, உழைப்புத் துளிகளாக பொறிக் கப் பட்டுள்ளவை.

தந்தை என்பவர் முதலில் ஓர் அன்னைக்குப் பிள்ளையாகவும், மனைவிக்கு கணவனாகவும் பின்னர் ஒரு பிள்ளைக்கு தந்தையாகவும் வடி வெடுக்கின்றார். எனவே, தந்தையாவதற்கு முன்பே அதற்கு வேண்டிய நெளிவு சுளிவுகளை கற்கும் பள்ளியாக அவரது வாழ்க்கை அமைகிறது.

ஒரு குழந்தை பிறந்ததன் மகிழ்ச்சியில் திளைக்கும் போதே அதன் சுகமான வாழ்வுக்கான வாழ்வாதாரத்தை தயார் செய்யும் அதி அவசியமான வேலை யில் இறங்குகின்றார். அக்குழந்தையின் கல்விக்கு வேண்டிய பணம், குழந்தை வெளிநாடு சென்று கல்வி கற்க வேண்டுமெனில் அதற்கான பண சேமிப்பு, பின்னர் அக்குழந்தை வளர்ந்ததும் அவன் / அவளின் திருமணத்திற் கான சேமிப்பு, அவர்களுடைய சுகமான வருங்கால வாழ்விற்கான வருமான ம், வசதியிருந்தால் ஒவ்வொருவருக்கும் ஒரு வீடு, சுகமாக வளைய வர ஒரு கார் என ஆதி முதல் அந்தம் வரை வழி முறைகளை யோசித்து சேர்க்கும் ஓர் அரிய மனிதர் தந்தைதான்.

இவை யாவையும் தாண்டி, அவர் தன் பிள்ளைகளுக்கு குருவிற்கு முன்னால் வரும் குருவாவார். குழந்தை பிறந்தது முதல் ஒரு தாய் அவனை அல்லது அ வளை ஊட்டி சீராட்டி வளர்ப்பாள். ஆயின் தந்தை என்பவர் தன் நடத்தையால் தன் பிள்ளைக்கு வாழ்வின் எதிர் காலத்திற்கு வழி வகுப்பவர்.

குழந்தை தத்தி தத்தி நடை பயிலும் முதல் தன் அன்னையையும் தந்தையை யும் கூர்ந்து கவனித்து வளர்கிறது.

அம்மா நற்குணங்களையும் வாழ்க்கை முறைகளையும் போதிக்கும் வேளையில் தந்தையானவர் அதே குழந்தைக்கு நேர்மை விதிகளையும் நிதானமான சிந்தனைகளையும் தன் அன்றாட வாழ்க்கையின் போக்கில் ஏட்டுக் கல்வியாக இல்லாமல் வாழ்க்கை நெறிகளாக அதன் மனதில் ஆழப் பதிய வைக்கின்றார்.

நண்பர்களே, நான் பேசுவது என் அனுபவத்திலிருந்து. ஏனெனில் நானும் பெண்தான். நானும் ஒரு தாய். ஆனால் நான் என் பெண்களை உட்கார்த்தி வைத்து பல நேரங்களில் கூறும் அறிவுரைகளை அதி சுலபமாக தன் நடத்தையால் என் கணவர் அவர்களுக்கு வெளிச்சம் போட்டு காட்டுவதையும் அது அவர்களின் மனதில் இன்று வரை ஆழமாக பதிந்திருப்பதையும் காண்கிறேன்.

என் தந்தை தமிழ்நாடு எலெக்டிரிசிடி போர்ட் (TNEB) அலுவலகத்தில் எக்ஸிகூடிவ் எஞ்சினியராகப் பணி புரிந்தவர். என் சிறு வயது முதல் அவர் தன் சக அலுவலர்களிடமும் தன் கீழ் வேலை செய்யும் தொழிலாளர்களிடமும் எவ்வாறு பழகுகின்றார் என்று பார்த்தறிந்தவள் நான்.

தன் அதிகாரி எங்கள் வீட்டிற்கு வந்தாலும் எழுந்து நிற்பார். அதே போல் தொழிலாளி வந்தாலும் எழுந்து நின்று வரவேற்பார். அதற்கு அவர் சொல்லும் காரணம் :
“அதிகாரமும் தொழிலாளித்தனமும் அலுவலகத்தின் வாசலோடு முடிந்து விடுகின்றன. அவர்கள் என்னைத் தேடி என் வீடு வரும்போது அவர்கள் என் விருந்தாளிகள். எனவே இருவருக்கும் ஒரே மரியாதைதான்” என்பதாகும். இந்த மிக அழகிய குணத்தையும் சமத்துவத்தையும் கற்று தந்தது என் தந்தையின் நடத்தைதான்.

மேலும் அவருடைய நண்பர்கள் அவரைப் பற்றி பேசும்போது மறக்காமல் மேற்கோள் காட்டிக் கூறுவது அவரின் நேர்மையைதான். அன்று அது எனக்கு பெருமையைத் தந்தது. இன்று அது என் வாழ்க்கைப் போக்காகி விட்டது.

எங்கள் தந்தை எங்களுக்கு சொல்லிக் கொடுத்த முதல் பாடம் :
“தனியாக வேலை செய்யும்போது நேர்மையைக் கடை பிடியுங்கள்; பின்னர் மற்றவருடன் வேலை செய்யும்போது அது தானாக உங்கள் நடைமுறையாகி விடும்” என்பதுதான். சொன்னவர் மட்டும் அல்ல. அவ்வாறே வாழ்ந்தும் காட்டியவர். அவர் தன் நேர்மையினால் பல இன்னல்களைச் சந்தித்திருக்கின்றார். இருந்தும் என்றும் அசைந்து கொடுக்காத அஞ்சா நெஞ்சர்.

பள்ளிக்கு / கல்லூரிக்கு செல்லும் வயது முதிர்ந்ததும் அவர் கற்றுக் கொடுத்த அடுத்த பாடம் படிப்பிலும் தேர்விலும் நேர்மையை கடைப் பிடிப்பதுதான். எங்கள் தந்தையின் ஃபேமஸ் வாக்கியம் : “நீங்கள் தேர்வில் வெற்றி பெறா விட்டால் சிறிது மன வருத்தத்துடன் போகும். ஆனால், தப்பாக தேர்வெழுதி வெற்றி பெற்றால், என்றும் மன வருத்தத்துடன் போகும்”

என்பது. இது எங்கள் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்து இன்று வரை காத்துள்ளது.

மற்றும் எங்கள் தந்தையில் மிகச் சிறந்த குணமானது பிள்ளைகளுக்குள் ஆண் பெண் வித்தியாசம் பாராதது. என்னையும் என் சகோதரனையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்ப்பார்.

1970களிளேயே எங்கள் உறவினர் யாவரும் எதிர்த்தும் கேளாமல் என்னை ஒரு கோ எஜுகேஷன் (co-education) பள்ளியில் சேர்த்து அனைத்து லூட்டிகளையும் அடிக்க வைத்து பட்டைத் தீட்டிய வைரமாய் வெளிக் கொணர்ந்தார்.



நான் ஆண்களிடம் சகஜமாகப் பழகுவதிலும் எந்தக் கட்டுப்பாடும் விதிக்காதவர். ஆனால் அதன் உட்புகுந்து நன்மைகள் யாவை, தீமைகள் யாவை என்பதை விரிவாகவும் விளக்கமாகவும் புரிய வைத்தவர்.

என்னிடமும் என் சகோதரர்களிடமும் அவர் அடிக்கடி கூறுவது : “அந்தந்த வயதில் அந்த வயதிற்கேற்ற கேளிக்கைகளை தவறாமல் அனுபவித்து விட்டு சூடு படாமல் வெளி வருவதுதான் பிற்காலத்தில் உங்களை வலுவாக்கும்” என்னும் பொன் வாக்கியம். வளர்ந்து திருமணமாகி இப்போது நான் இரு பெண்களுக்கு தாயான பின் அவர்களுக்கு கூறும் அறிவுரையும் இதுதான்.

என் தந்தை கூறிய ஒவ்வொரு அறிவுரையும் எனக்கு வளர வளர மிகவும் உதவியாகவும் வலிமை மிக்க, ஏறுவதற்கேற்ற ஏணிப்படியாகவும் திகழ்ந்தது.

நான் திருமண பந்தத்தில் காலெடுத்து வைத்து இரு சுட்டிப் பெண்களை பெற்றெடுத்த பின்னர், அவரது ஒவ்வொரு வார்த்தைக்குள்ளும் பொதிந்திருந்த அர்த்தத்தையும் உண்மையையும் உணர்ந்தேன்.

என்றுமே பிள்ளைகளுக்கு நாம் எடுத்துக் காட்டாகவும் முன்மாதிரியாகவும் வாழ வேண்டும். இந்த வரியைச் சொல்வது சுலபம். ஆனால், நடைமுறைப் படுத்துவது மிகவும் கடினம். ஏனெனில் பல நேரங்களில் வேலை முடிய வேண்டும் என்ற அவசரத்தில் பெற்றோர்களாகிய நாம் சிலப் பல தவறுகளை செய்து விடுகின்றோம். அவை நம் பிள்ளைகளின் மனதில் பதிந்து “இப்படி செய்வது சரிதான்” என்ற முத்திரையைக் குத்தி விடுகின்றன. அதை மாற்றுவது என்பது மிகவும் கடினம். எனவே, பெற்றோராகிய நாம் இருபத்தி நான்கு மணி நேரமும் எச்சரிக்கையுடன் செயல்களை கையாள வேண்டும்.

என் கணவர் என்கின்ற தந்தை தன் பெண்களுக்கு விவரம் புரியும் நாளிலிருந்து கூறும் ஒரே அறிவுரை இதுதான் : “நீ செய்யும் காரியம் சரியானது என்ற மனதார நம்பிக்கை உன்னுள் இருந்தால், உச்ச நீதிமன்ற நீதிபதி கேட்டாலும் உண்மையைச் சொல். பின் விளைவுகளை பற்றி பயம் கொள்ளாதே”. நான் இவ்வார்த்தைகளை மிக நேர்த்தியானவையாக கருதுகின்றேன். உண்மையிலேயே பெருமைப் படுகின்றேன். இவ்வளவு நல்ல தந்தை என் பெண்களுக்கு வாய்த்தமைக்கு.

ஒரு தந்தை என்பவர் தன் பிள்ளைகளுக்கு பயமின்றி ஏறி உலகை ஆராய வலு மிகுந்த தன் தோள்களை ஏணியாக்குகின்றார் (You can climb on to his firm shoulders and stand tall to explore the wide world).

என் தந்தையும் அப்படித்தான் என்னை வளர்த்தார். என் கணவரும் அப்படித்தான் தன் பெண்களை வளர்த்திருக்கின்றார்.

ஆகவே, நண்பர்களே, கண்டிப்பாக தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை. ஆயின் “தந்தை சொல் மிக்க மந்திரமில்லை”.

சத்தமே போடாமல் வரலாறு படைப்பவர்கள் தந்தைகள். உலகிலுள்ள அத்தனை தந்தைமாரையும் என் சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# நாடி ஜோதிடம் வல்லிசிம்ஹன்

நாடியைத் தேடி ...இரண்டாம் பாகம்

உ

சரவணபவனில் சாப்பாடு முடிந்தது. மற்ற இத்யாதி வேலைகளை முடித்துக் கொண்டு, எங்கள் பச்சை அழகி பத்மினி காரில் ஏறி மீண்டும் வரதராஜர் கோவில் மதிலுடன் பயணத்து மனதில் நூறு கேள்விகளுடன் அகத்தியர் நாடிக்கு வந்தோம்.

சுத்தமாகப் பராமரிக்கப் பட்ட அந்தக் குடிலின் பந்தல் கீழ் பெஞ்சுகளில் இன்னும் நிறைய ஆட்கள் உட்கார்ந்திருந்தனர்.

அன்னிய நாட்டவர்களும் , நெற்றியில் குங்கும விபூதியுடன் உட்கார்ந்திருந்தது அதிசயமாக இருந்தது. எங்களைக் கண்டதும் உள்ளே இருந்த வந்த இளைஞர் “ஐயா உங்களுக்காகநாடி ஓலை படிக்கக் காத்திருக்கிறார் உள்ளே வாருங்கள்” என்று மிக மரியாதையாக அழைத்துச் சென்றார்.

குளுமையான காற்று வீசிய ஒரு கூடத்தைத் தாண்டி மாடிப்படிகளில் ஏறி மேலே வந்தோம். அங்கே இன்னோரு இளைஞர் மேஜைக்கு அப்பால் உட்கார்ந்திருந்தார். அவர் பக்கத்தில் ஓலைச் சுவடிகளுடன் இன்னோருவர் இருந்தார், .

என் கணவருக்கு வணக்கம் சொல்லிவிட்டு நாடி படிப்பது பற்றி சுருக்கமாகச் சொன்னார்.

பிறக்கும் உயிர்களுக்கெல்லாம் கிட்டத்தட்ட ஆயிரம் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே , ஜனன மரண ஓலைகள் உண்டு என்வும். ஏற்கனவே கணிக்கப் பட்டதைத்தான் தாங்கள் படிக்கப் போவதாகவும். விளக்கினார். நான் பணம் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று கேட்டதற்கு “நீங்கள் கேளுங்கள் , உங்களுக்கு சரி என்று தோன்றினால் மேற்கொண்டு பார்க்கலாம்” என்றார்.

முதலில் ஐயாவுக்கு சொல்கிறோம். அய்யா பெயரில் 4 ஏடுகள் எடுத்தோம்.

உங்களுக்கு எது பொருத்தம் என்று சொல்லுங்கள். நீங்க நாலாவது குழந்தையாக உங்கள் பெற்றோருக்குப் பிறந்தீர்களா என்றார். இவர் 'ஆமாம்' என்று சொல்ல,
சட்டென்று அந்த ஓலையை ஒரு ராகத்தோடு அந்தப் பையன் படிக்க ஆரம்பித்தார்.

" வைணவ குலத்தில் , சுந்தரராஜன் , கமலா தம்பதிக்குப் பிறந்தவர். நான்கு சகோதரிகள். இரும்பு சம்பந்தமான தொழிலில் இருப்பவர். நல்ல உழைப்பாளி. தங்கள் பெற்றோர் மறைந்துவிட்டனர். தங்களுக்கு மனைவியும் மூன்று வாரிசுகளும் இருக்கிறார்கள்" என்று நிறுத்தினார்.

என்னால் படபடப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை. இவர் "ஆமாம் நீங்கள் சொல்வதெல்லாம் சரி" என்றார், சிங்கம் ஷாக் ஆன முதல் கணம் அது.:)

இப்பொழுது உங்களுக்கு என்ன தெரிய வேண்டும் என்றதும், என்னைப் பார்த்தார் சிங்கம். குழந்தைகள் எதிர்காலம்தான் தெரிய வேண்டும் என்று சொன்னார்.
உடனே அவர் , உங்கள் ஓலைப்படி அவர்கள் எதிர்காலம் நன்றாகவே இருக்கிறது.
முதல் பையன் வியாபார மேல் படிப்பைப் படித்து இப்போது இருக்கும் வேலையை விடப் பெரிய வேலைக்குச் சென்று வெளி நாடும் செல்வார், மற்றவர்களுக்கும் நல்லதே நடக்கும். அதற்கு அவர்கள் கைரேகை வேண்டும் என்றாரே பார்க்கணும்!

சரி அம்மா ஓலையைப் படிக்கிறேன்.

என்னை நோக்கி "அம்மா உங்கள் பெயர் ர, ரா, ரே யில் ஆரம்பிக்குமா?" என்றார்.

நானும் தலை அசைத்தேன். இரண்டு மூன்று ஓலைகளைத் தள்ளிவிட்டு
" உங்கள் பெயர் ரேவதி. நாராயணன் ஜெயலக்ஷ்மி என்ற உயர்ந்த தம்பதியினரின் இரண்டாவது வாரிசு, நற்குலத்தில் பிறந்து நற்குலத்தில் வாழ்க்கைப் பட்ட வயது 18. உங்களுக்குச் சில பல உடல் நலக் குறைவு இருந்தாலும் வாழ்வில் குறை இல்லை. இன்னும் இரண்டு தம்பியர் இருக்கின்றனர். உங்கள் வீடு கடற்கரையை ஒட்டிய ஊரில் கிழக்கு மேற்காக அமைந்த சாலையில் நடுவில் இருக்கிறது.

ஆரம்ப கணபதியும், அனுகூல வாயுகுமாரனும் குடி கொண்ட கோவில்கள். இரு பக்கமும். தெய்வ பலத்தால் உங்கள் கவலைகள் தீரும். இன்னும் 10 வருடங்களுக்குள் வாரிசுகளின் திருமணம் கை கூடி வரும்.
உங்கள் பூர்வ ஜன்ம பலன்களைப் பார்க்க நீங்கள் அடுத்த வாரம் வரலாம்.
இப்போது படித்தது நீங்கள் வந்த நேரத்தக் கணித்துச் சொன்னது" என்று ஓலைகளைக் கயிறு கொண்டு கட்டினார்.

நான் பிரமை தட்டி உட்கார்ந்திருந்தேன்.

இது எப்படி சாத்தியம்.???

அவர்களுக்கு எங்களை முன்னே பின்னே தெரியாது.
பொதுவாகப் படித்த ஓலைகளுக்குக் கட்டணம் அப்போது 150 ரூபாய்.
கட்டிவிட்டு வெளியில் வந்தவர்களின் மன நிலை அதிசயத்திலிருந்து வெளிவரவில்லை.!!

அடுத்த வாரமும் சென்றோம் என்று நான் சொல்லத் தேவை இல்லை:)
நேரே அம்மா , அப்பாவிடம் சொல்லிவிட்டே வீட்டுக்குத் திரும்பினோம்.
வரும் வழியில் பத்மம் விடுதியில் காப்பியும், ரவா தோசையும் சாப்பிட்டுவிட்டு வந்தோம் என்பது கொசுறு செய்தி.


அன்புடன்,
ரேவதி.நரசிம்ஹன்
(தொடரும்)



மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

## கார்களே நில்லுங்கள், கண்களே பாருங்கள் !! kayjee

**இப்படி ஒரு கார் கண்காட்சி நம் ஊரில் என்று நினைக்கும்போதே ஒரு தூசிப்படலம் நம் கண்ணில் .....**



# குட்டி மஸ்தான் உண்மையில் பெரிய்ய்ய ஆள்தான்



**இங்கு நாங்கள் பார்த்த எல்லா கார்களையும் பார்க்க நீங்கள் கொடுத்துவைக்கவில்லை !**





# மாப்பிள்ளை அழைப்பு என்றால்.... மோட்டார் சுந்தரம்பிள்ளை கார் வருமோ?



## இந்த சிவப்புக் காரில் என்ஜின் எங்கே இருக்கும் என்று யோசித்திராதவர் உண்டோ?



வாசகார்களில்  இது நிறைய இருக்கலாம்.



# பதினாறுக்கு அப்புறம் பத்தொன்பதா!



## kg யின் இரண்டாவது கார்!



## எஞ்ஜின்ல எவ்வளவு சிலிண்டர்கள் இருக்கும்?




MODEL (A)

## 4 WD என்றாலே jeep தான் முன்னெல்லாம் !




25

## பளப் பளா .. ஜிலு ஜிலு !



## 1950..60 களில் இந்தக் கார், நடிகர்களின் status symbol !



## இன்ஸ்ட்ருமென்ட் க்ளஸ்ட்டர் ஆ ? அப்படீன்னா?



## kg யின் முதல் கார் ...MSZ 53





## லீபுவின் கைவரிசையோ?



## இது நிறைய பார்த்திருப்போம்!



## மீண்டும் ஒரு மோ சு பிள்ளை?



மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

## உங்களுக்குத் தெரியுமா? கார் கால தகவல்கள் By KGG

**Automobile என்னும் வார்த்தை முதலில் 1900 ஆம் வருடம்தான் உபயோகப்படுத்தப்பட்டது!**

**Car என்ற வார்த்தை ஆங்கில அகராதிகளில் இடம்பெறத் தொடங்கியது பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில். ஆனால் கார் கண்டுபிடித்து செய்யப்பட்டதோ பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில்தான்!**

**இந்தியாவில் Car Festial என்னும் பூரி ஜெகன்னாதர் ரதயாத்திரை பல நூற்றாண்டுகளாக நடந்து வருகிறது! நம்ம ஊரு தேர்களைக் கூட ஆங்கிலேயர்கள் car என்றுதான் குறிப்பிட்டார்கள்!**

**Car என்ற வார்த்தை தோன்றியது Chariot என்ற வார்த்தையிலிருந்து.**

**Karl Benz (அவர் பெயரிலேயே கார் இருக்கு!) செய்த முதல் வாகனத்திற்கு Motorwagen என்று பெயர். வருடம் 1886.**

**இந்தியாவுக்குள் முதன் முதலாக கார் நுழைந்த வருடம் : 1897 (That car was owned by an English man, Mr Foster of Crompton Greaves.)**

**இந்தியாவில் முதன் முதலாக கார் வாங்கிய இந்தியர் ஜாம்ஷெட்ஜி டாட்டா - வருடம் 1898)**

**முதலில் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட கார் : அம்பாசடர் கார் (1957) (அதன் வடிவமைப்பு இங்கிலாந்தின் Morris Oxford கம்பெனியினுடையது)**

**உலகிலேயே அதிக விலை கொண்ட கார் எது என்று தேடினால் ..**

**The most expensive new car ever sold is the Bugatti La Voiture Noire, a one-off model rumored to have cost its anonymous owner $19 million.**


**இதுவரை விற்பனையான மிகவும் விலையுயர்ந்த புதிய கார் புகாட்டி லா வோய்ட்டர் நோயர் ஆகும். இதை அதன் (அநாமதேய) உரிமையாளர் $19 மில்லியன் கொடுத்து வாங்கியிருக்கக்கூடும் என்று ஒரு வதந்தி!**
**( கிட்டத்தட்ட நூற்று நாற்பத்திரெண்டு கோடி ரூபாய் விலை!)**

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# வாசகர் அனுப்பிய கார் படங்கள்

## திருமதி ரமா ஸ்ரீநிவாசன் அனுப்பிய கார் படங்கள் :

1 )



2



3 )



# உங்களைப்பற்றி நீங்கள் ...

வாரம் ஒரு வலைப்பதிவர்/ வாசகர் என்ற தலைப்பில், எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள் பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத இருக்கிறோம்.

வலைப்பூவர்களும், வலைப்பூவையர்களும், வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர், வலைப்பூ பெயர், வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன், தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள் முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும், அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன் எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய ஒரு சுயபுராணமும் எழுதி, அதை

engalblog@gmail.com

என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள், அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படிக்கும் ஆர்வம் மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம்.

எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில், வாரம் ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம்.
எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு.

இந்த மின்நிலா இதழ் பற்றிய உங்கள் கருத்துகளை,
engalblog@gmail.com
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் !


A COP JUST PULLED ME OVER AND
SAID PAPERS,
TRAFFIC SERVICES 9012
DGX 342 EC
NELSON MANDELA METRO
SO I SAID SCISSORS I WIN, AND
DROVE OFF


New seatbelt design:
45% less car accidents!!